Registered as a News Paper
பக்கங்கள் 06
விலை: ரூபா 5-00

Chundikuli Branch Library

ஈழநாதம்
THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி
நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | ஆனி 30 | [14-07-93] | புதன்கிழமை | ஓசை 146

## குடும்ப அட்டை பெற்றுக்கொள்ள மாத இறுதிவரை கால அவகாசம்

இதுவரை குடும்ப அட்டைக்கு விண்ணப்பிக்காதவர்களும், பூரணமாக விபரங்களைப் பதியாதவர்களும் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன் உங்கள் பகுதிக் கிராம சேவகர்களிடம் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அத்துடன் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பப்பதிவு அட்டைகளை வைத்திருப்பவர்களும் அவற்றை இம்மாத இறுதிக்குள் கிராமசேவகரிடம் ஒப்படைப்பதன் மூலம் அநாவசியச் சிரமங்களை தவிர்த்துக்கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு 19, 06, 1993 ஈழநாதம் பத்திரிகையைப் பார்க்கவும்.

# சாகும்வரை உண்ணாவிரதம் கைதிகளால் ஒத்திவைப்பு!

[யாழ்ப்பாணம்]

இன்று ஆரம்பிக்கப்பட இருந்த சாகும்வரையிலான உண்ணாவிரதத்தை போர்க் கைதிகள் ஒத்திப்போட்டுள்ளனர். உண்ணாவிரதத்தை மேற்கொள்ளவுள்ள ஐந்து பொலிசார் நோயுற்று இருப்பதாலேயே உண்ணாவிரதம் ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

இவ் உண்ணாவிரதப் போராட்டம் குறித்து 'புலிகளின் குரல்' வானொலி வெளியிட்டுள்ள செய்தியில் இன்று ஆரம்பிக்கப்படவிருந்த சாகும் வரையிலான உண்ணாவிரதம் ஐந்து கைதிகளின் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதால் சில தினங்களுக்கு ஒத்திப்போட வைத்திருப்பதாகத் தெரிவித்தது.

யுத்தக்கைதிகளுடன் அவர்களது உறவினர்களும் உண்ணாவிரதம் இருக்கப்போவதாகப் பிரிகேடியர் வீரசேகரா கூறியிருப்பது குறித்து கருத்து வெளியிட்ட யுத்தக்கைதி பி.பண்டாரநாமும் தமது உறவினர்களும் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக எச்சந்தர்ப்பத்திலும் எவருக்கும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என்றார். யுத்தக் கைதிகள் 33 பேர் மட்டுமே உண்ணாவிரதம் குறித்து முடிவெடுத்ததாகவும் இதில் உறவினர்கள் சம்பந்தப்படவில்லை என்றும் அவர் கூறினார். இந்நிலையில் உறவினர் எவ்வாறு உண்ணாவிரதம் இருக்க முடிவெடுத்திருக்க முடியும்என்றும் அவர் வினவினார்.

தாம் ஆரம்பிக்கவிருந்த உண்ணாவிரதம் குறித்து அரசதரப்பிற்கும் மற்றும் நிறுவனங்களுக்கும் அனுப்பிய கடிதப் பிரதியையும் யுத்தக் கைதிகள் காண்பித்துள்ளனர்.

## 15 தமிழ் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு கிடைத்தது

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாக சேவையின் முதல் வகுப்பிற்கு பதவியுயர்வு சுமார் 15 தமிழ் அதிகாரிகளுக்கு கிடைக்கபபெற்றுள்ளது.

இவர்களது பெயர்ப்பட்டியல் நேற்று வெளியாகியது. இதன்படி திரு. கே. சண்முகநாதன், திரு ரி. வைத்திலிங்கம், திரு. எம் சி. அருந்தவச்செல்வம், திருமதி கே சிவசிதம்பரம், திரு ஏ. சிவசாமி, திரு. ஆர் பரமலிங்கம், திரு. எஸ் அமிர்தலிங்கம், திரு. எஸ். எஸ். சண்முகதாஸ், திரு. கே. சபாபதிப்பிள்ளை, திரு. வி. வேலுமயிலும், ஜெகராஜசிங்கப் விஜயலெட்சுமி திரு எஸ். தியாகலிங்கம், திரு கே லங்காநேசன் திரு எஸ் குமாரதாசன், திரு. ரி. தர்மகுலசிங்கம் ஆகியோருக்கு மேற்படி பதவி உயர்வு கிடைத்துள்ளது, (பா)

## கிராமஉத்தியோகத்தருக்கான பதவி உயர்வு பரீட்சை

கிராம உத்தியோகத்தர்களைப் பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை விரைவில் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மாகாண அரசாங்கசேவைக்குரித்தான கீழ்வரும் தகைமைகளையுடைய II ஆம் தரத்தின் கிராம உத்தியோகத்தர்களை இந்த சேவையின் Iஆம் தரத்திற்கு பதவி உயர்த்தும் பொருட்டு மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் சகலரும் தமது விண்ணப்பப் படிவங்களை தாம் சேவை புரியும் பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேசச்செயலாளர் ஊடாக தாம் நியமிக்கப்பட்டுள்ள மாகாணசபையின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு 23-07-93 திகதிக்கு முன்பு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

இவர்களுக்குப் பரீட்சை நடைபெறும் திகதி குறிப்பிடப்பட்டு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ் விண்ணப்பங்கள் யாவும் பரீட்சை ஆணையாளர் த. பெ. 1503 மலே வீதி, கொழும்பு-2 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும.

## தமிழ்நாட்டிலிருந்து திரும்பிய இளைஞர் கொழும்பில் கைது

தமிழ்நாடு அகதிமுகாம் ஒன்றில் ஐநது வருட காலம் இருந்து விட்டு நாடு திரும்பிய பொலிகண்டி பிள்ளையார் கோயிலைச் சேர்ந்த லோகேஸ்வரன் மணிவண்ணன் என்ற மாணவர் கொழும்பில் ஒரு வாரகாலமாக விளக்க மறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகத்தின் பேரில் கடந்த மாத இறுதியில் கைதான இவர் இந்தியாவில் அகதியாக இருந்துவிட்டு அவசரகால கடவுச்சீட்டு பெற்று திரும்பிய மாறும் சட்டத்தரணி கோரிக்கை விடுத்து கடவுச்சீட்டையும் நீதிவானிடம் சமர்ப்பித்திருந்தார்.

கடவுச்சீட்டு முடிவடையும் திகதி 26-1-95 என்று குறிக்கப்பட்டிருந்தது. அதில் உள்ள 5என்ற இலக்கம் நீதிவானுக்கு சந்தேகம எழுப்பியது. கடவுச்சீட்டை குடிவரவு குடியகலவு திணைக்களத்திற்கு அனுப்பி அறிக்கை பெறுமாறு பொலிசாரை பணித்த நீதிவான் அதுவரை மணிவண்ணனை விளக்கமறியலில்

## தேசிய அரசாங்கத்தில் சுதந்திரக் கட்சி இணையாது

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்காக தமது கட்சி எந்தநேரத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒத்துழைக்கப் போவதில்லை என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்; இவ்வாறான சந்தர்ப்பத்தில் எந்த ஒரு எம்பியும் முடிவெடுக்க அவருக்கு முழுமையானசுதந்திரம் உள்ளதாகவும் தெரிவித்தார்.

இது போன்ற ஒரு நடவடிக்கையே கட்சியை பிளவில் இருந்து காக்க முடியும் என நம்பப்படுகின்றது. தேசிய அரயத்தில் கட்சியின் கொள்கைக்குஅமையவே நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய கமிட்டி நாளை கூடவுள்ளது. இதில் தேசிய அரசாங்கம் அமைப்பது குறித்த யோசனை ஆராயப்படவுள்ளதாக சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

இத்துடன் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நெவில் பெர்னாண்டோவின் தனிநபர் பிரேரணை தொடர்பாக மத்திய கமிட்டியில் ஆராயப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## தேசிய அரசு அமைப்பது தொடர்பாக பேசவில்லை

– அனுரா

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாக தான் ஜனாதிபதியுடன் பல சுற்றுகளில் பேச்சு வார்த்தை

திர கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டார

## எறிகணை வீச்சு

[யாழ்ப்பாணம்]

மண்டைதீவை அண்மித்த பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுக் காலை 11.30 மணியளவில் யாழ். நகரின் கரையோரப் பகுதிகளை நோக்கி ஷெல்தாக்குதல்களை நிகழ்த்தியுள்ளனர்.

மேற்படி பகுதிகளில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் கோட்டை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. மேலும் இப்பகுதிகளில் இருந்து கடந்த சில நாட்களாக இராணுவத்தினர்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## பூநகரி பாதை விவகாரம் கைவிடப்பட்டது?

பூநகரி - சங்குப்பிட்டி பாதையை திறப்பது தொடர்பாக நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகள் கைவிடப்பட்டுவிட்டதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயப் பேச்சாளர் ஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

இப்பாதை திறப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்கும் இடையில் பொதுவான ஓர் இணக்கப்பாடு ஏற்படாத நிலையில் பூநகரி - சங்குப்பிட்டி பாதை திறப்பது தற்போது கைவிடப்பட்டுள்ளதாக அறியவருகிறது.

இது தொடர்பாக, விடுதலைப் புலிகளுடனும், அரசாங்கத்துடனும் ஐ நா. அதிகாரிகள் பேச்சுக்கள் நடாத்தியது தெரிந்ததே.

## காங்கேசன் சீமெந்து ஆலை மூடும் திட்டத்தை கைவிடுக

தொழிலாளர் யூனியன் கோரிக்கை

செயலாளர்கள் மூலம் விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் சகலரும் தமது விண்ணப்பப் படிவங்

...தெரிவிக்கப்படுகிறது. இவ் விண்ணப்பங்கள் யாவும் பரீட்சை ஆணையாளர் த. பெ. 1503 மலே வீதி, கொழும்பு-2 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## தமிழ்நாட்டிலிருந்து திரும்பிய இளைஞர் கொழும்பில் கைது

தமிழ்நாடு அகதிமுகாம் ஒன்றில் ஐந்து வருட காலம் இருந்து விட்டு நாடு திரும்பிய பொலிகண்டி பிள்ளையார் கோயிலைச் சேர்ந்த லோகேஸ்வரன் மணிவண்ணன் என்ற மாணவர் கொழும்பில் ஒரு வாரகாலமாக விளக்க மறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகத்தின் பேரில் கடந்த மாத இறுதியில் கைதான இவர் இந்தியாவில் அகதியாக இருந்துவிட்டு அவசரகால கடவுச்சீட்டு பெற்று திரும்பியவர் என்றும் பிணையில் விடுமாறும் சட்டத்தரணி கோரிக்கை விடுத்து கடவுச்சீட்டையும் நீதிவானிடம் சமர்ப்பித்திருந்தார்.

கடவுச்சீட்டு முடிவடையும் திகதி 26-1-95 என்று குறிக்கப்பட்டிருந்தது. அதில் உள்ள 5என்ற இலக்கம் நீதிவானுக்கு சந்தேகம் எழுப்பியது. கடவுச்சீட்டை குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு அனுப்பி அறிக்கை பெறுமாறு பொலிசாரை பணித்த நீதிவான் அதுவரை மணிவண்ணனை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

## சுங்கபிரிவின் கெடுபிடியால் நிவாரண முத்திரை தாமதம்

(யாழ்ப்பாணம்)

சுங்கப் பிரிவினரின் கெடுபிடி காரணமாக குமாரி கப்பலில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்குரிய நிவாரண உணவு முத்திரை எடுத்துவருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இம் முறை கொழும்பு துறைமுகத்திலிருந்து குமாரி கப்பல் வடக்கு நோக்கி புறப்பட ஆயத்தமானபோது ஏற்கனவே அக் கப்பலில் ஏற்றப்பட்டிருந்த உணவு முத்திரைகளை சோதனையிடவேண்டும் என்று சுங்கப் பிரிவினர் கேட்டுக் கொண்டதை அடுத்து அவையாவும் கீழிறக்கப்பட்டன.

இதனால் தாமதிக்க முடியாதென குமாரிக் கப்பல் வேறு பொருள்களுடன் வடக்கு நோக்கிப் புறப்பட்டதாம்.

இதனால் இன்னும் இரு வாரங்களுக்குப் பின்னரே உணவு முத்திரைகள் யாழ். நோக்கி எடுத்துவரப்படும் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனையடுத்து இம் முத்திரையின்றியே, இரு வாரங்களுக்குரிய உணவுப் பொருள் விநியோகத்தை மேற்கொள்வதற்கு யாழ். செயலகம் தீர்

(6ஆம் பக்கம் பார்க்க)

பொது எழுதுவினைஞர் சேவை

## பதவி உயர்வுப் பரீட்சை கொழும்பில் மட்டுமே!

(யாழ்ப்பாணம்)

பொது எழுதுவினைஞர் சேவையின் அதிசிறப்பு பிரிவு மூப்பு அடிப்படையிலான பதவி உயர்வுப் பரீட்சை எதிர்வரும் 31ஆம திகதி கொழும்பில் மட்டுமே நடைபெறுமென பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளதாக யாழ் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தங்களுக்கான பிரயாண ஒழுங்குகளை தாங்களே செய்ய வேண்டுமெனவும் அனுமதி அட்டைகளை பரீட்சைத் திணைக்களத்தில் நேரில் சென்று பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (பா)

# சுதந்திரக் கட்சி இணையாது

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்காக தமது கட்சி எந்தநேரத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒத்துழைக்கப் போவதில்லை என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்; இவ்வாறான சந்தர்ப்பத்தில் எந்த ஒரு எம்பியும் முடிவெடுக்க அவருக்கு முழுமையானசுதந்திரம் உள்ளதாகவும் தெரிவித்தார்.

இது போன்ற ஒரு நடவடிக்கையே கட்சியை பிளவில் இருந்து காக்க முடியும் என நம்பப்படுகின்றது. தேசிய அரசுக்கு ஆதரவு தெரிவிக்கும் பாராளுமன்றஉறுப்பினர் விடயத்தில் கட்சியின் கொள்கைக்குஅமையவேநடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய கமிட்டி நாளை கூடவுள்ளது. இதில் தேசிய அரசாங்கம் அமைப்பது குறித்த யோசனை ஆராயப்படவுள்ளதாக சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

இத்துடன் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நெவில் பெர்னாண்டோவின் தனிநபர் பிரேரணை தொடர்பாக மத்திய கமிட்டியில் ஆராயப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## தேசிய அரசு அமைப்பது தொடர்பாக பேசவில்லை

\- அனுரா

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாக தான் ஜனாதிபதியுடன் பல சுற்றுகளில் பேச்சு வார்த்தை நடததியதாக பத்திரிகையில் வெளிவந்த செய்தியை சுதந்திர கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டார நாயக்கா மறுத்துள்ளார்.

தானோ தனது எந்த ஒரு பிரதிநிதியோ இது தொடர்பாக ஜனாதிபதியுடனோ அல்லாது ஐக்கிய தேசிய கட்சியுடன் தொடர்புடைய யாருடனுமோ பேசவில்லை என்றும். இவ்வாறான நோக்கம் தம்மிடம் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

## தேசிய அரசாங்கத்தினால் தீர்வை ஏற்படுத்த முடியாது

### தினேஷ் குணவர்த்தன கருத்து

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தேசிய அரசாங்கத்தினால் ஒரு தீர்வை ஏற்படுத்த முடியாது. அவ்வாறு தேசிய அரசாங்கத்தினால் முடியுமானால் ஏன் சர்வகட்சி மகாநாட்டின் இத் தேசிய அரசை ஆதரிப்பவர்கள் ஒரு தீர்வு திட்டத்தை முன்வைக்கவில்லை என மக்கள் முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இன்று மக்களுக்குத் தேவை ஒரு பொதுத் தேர்தலே தவிர தேசிய அரசாங்க மில்லை. பெலவீனமான அரசாங்கம் தொடர்ந்து ஆட்சியை நடத்தவே அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது. எனவே இவ்வாறான பெலவீன அரசாங்கத்திற்கு தொடர்ந்து ஒத்துழைப்பு நல்க தான் தயா

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## 'மெரினால்' வந்தது

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு 'மெரினால்' கப்பல் நேற்று நண்பகல் 12மணியளவில் வந்து சேர்ந்தது. இக்கப்பலில் அரிசி, சீனி மொத்தமாக சுமார் 1400 மெட்றிக் தொன் எடுத்து வரப்பட்டது. யாழ். திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் கப்பலுக்கு சென்று வந்ததையடுத்து பொருள்கள் இறக்கும் வேலைகள் ஆரம்பமாகின. (யோ)

## வங்கி ஆவணங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை இலங்கை வங்கியில் இருந்த ஆவணங்கள் குமாரி கப்பல் மூலம் இலங்கை வங்கி யாழ். தலைமைக் காரியாலயத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளது. இவ் ஆவணங்கள் இராணுவப் பிடிக்

[6 ஆம் பக்கம் பார்க்க)

...பிரதியையும் யுத்தக் கைதிகள் காண்பித்துள்ளனர்.

...நாட்களாக இராணுவத்தினர்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## பூநகரி பாதை விவகாரம் கைவிடப்பட்டது?

பூநகரி - சங்குப்பிட்டி பாதையை திறப்பது தொடர்பாக நடைபெற்று வந்த பேச்சு வார்த்தைகள் கைவிடப்பட்டு விட்டதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயப் பேச்சாளர் ஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

இப்பாதை திறப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்கும் இடையில் பொதுவான ஓர் இணக்கப்பாடு ஏற்படாத நிலையில் பூநகரி - சங்குப்பிட்டி பாதை திறப்பது தற்போது கைவிடப்பட்டுள்ளதாக அறியவருகிறது.

இது தொடர்பாக, விடுதலைப் புலிகளுடனும், அரசாங்கத்துடனும் ஐ நா. அதிகாரிகள் பேச்சுக்கள் நடாத்தியது தெரிந்ததே.

## காங்கேசன் சீமெந்து ஆலை மூடும் திட்டத்தை கைவிடுக

### தொழிலாளர் யூனியன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் சீமெந்து ஆலையை மூடுவதற்கு அரசு மேற்கொண்ட முடிவை நடைமுறைப்படுத்த வேண்டாம் என்றும் மேற்படி முடிவை மீள்பரிசீலனை செய்யும் படியும் சீமெந்து பொதுத்தொழிலாளர் யூனியன் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்படி யூனியனைச் சேர்ந்த அதிகாரிகள் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளருடன் மேற்படி விடயம் குறித்து விரிவான பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர். அண்மையில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையின் போது இத் தொழிற்சாலை மூடப்படுவதால் தொழிலாளர்களுக்கு ஏற்படப்போகும் பல்வேறு பாதிப்புக்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. அத்துடன் தொழிற்சாலையை மூடுவதற்கான முடிவை கைவிடும் படியும் கேட்டுக் கொண்டதாக எமக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்விடயம் குறித்து மேற்படி அமைச்சின் செயலாளர் உட்பட அமைச்சர் மற்றும்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## அரசுக்கு எதிராக போராட முடிவு

அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையை எதிர்த்து இம்மாத நடுப்பகுதியில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி நாடு பூராவும் கூட்டங்களை நடத்த தீர்மானித்துள்ளது.

இந்த முக்கிய முடிவை கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் நடைபெற்ற கட்சி மத்திய கமிட்டியில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கட்சிச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

# வடமராட்சி கடற்பரப்பில் கடற்படை அட்டகாசம்

## கரையோரம் நோக்கி பீரங்கித் தாக்கு

வடமராட்சி கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரின் அட்டகாசங்கள் அதிகரித்துள்ளன. இக் கடற்பரப்பில் நிற்கும் கடற்படைப் படகுகள் கரையோரம் நோக்கி பீரங்கித் தாக்குதல் நடாத்துவதுடன் மீனவர் மீதும் தாக்குதலை நடத்தி வருகின்றன.

வடமராட்சி வடக்கு கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மீனவர்கள் மீது அகோரத் தாக்குதல்களை மேற்கொண்டதில் ஒருமீனவர் கடலில் மயக்கமடைந்தார். இரண்டு என்ஜின்களும், மீன்களும் கடற்படையினரால் பறித்து எடுத்துச் செல்லப்பட்டன.

நேற்றுக் காலை 6.00 மணியளவில் தொண்டமானாறு, பருத்தித்துறை முனை கடற்பரப்பிலேயே கடுமையான தாக்குதல்களை கடற்படையினர் மேற்கொண்டனர். கடற்பரப்பு குண்டுச் சத்தங்களாலும், வெடிச்சத்தங்களாலும் பலமணிநேரம் அதிர்ந்தது.

பருத்தித்துறை இன்பருட்டி கடற்பகுதியில் நிலைகொண்டுள்ள கடற்படையினரின் பீரங்கிப் படகுகளில் இருந்து கடந்தசில தினங்களாக மக்கள் குடியிருப்புகள் நோக்கி எறிகணை வீச்சுகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் அச்சம் காரணமாக மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்த்து வருகின்றனர்.

கடற்பரப்பில் காணப்பட்ட மீனவர்கள் துரத்தித் துரத்திச் சுடப்பட்டனர். மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து சுப்பர்மடத்தில் தங்கி வரும் வெள்ளைமயில் வெற்றிவேல் [வயது24] என்பவரே கடுமையாகத்தாக்கப்பட்டதில் மயக்கமடைந்தவராவர். ஐ ஆனந்த சிவஞானரத்தினம், க. சின்னராசா ஆகியோரது என்ஜின்களும், மீன்களையுமே கடற்படையினர் பறித்தெடுத்துச் சென்றனர்.

முனைப்பகுதியில் மீனவர்கள் பலர் கடற்படையினரால் சுற்றி வளைத்துப் பிடித்து கண்டபடி தாக்கப்பட்டனர். தொண்டமானாறு குடியிருப்புக்கள் மீதும் இரண்டு கடற்படை படகுகளிலிருந்து பயங்கரமான முறையில் பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. (யோ)

# தொடர்பு சாதனங்களுக்கு விஜேதுங்கா கட்டுப்பாடு

(கொழும்பு)

அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தகவல் தொடர்பு சாதனங்கள் கொள்கை பரப்பு சாதனங்களாக இல்லாமல் செய்தி வழங்கும் சாதனங்களாக செயற்பட வேண்டும் என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா பணித்துள்ளார். ஜனாதிபதி இப்பணிப்புரையை தகவல்துறை அமைச்சர் லொக்கு பண்டாரவிடம் விடுத்துள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வானொலி, தொலைக்காட்சி போன்றவை தமது கொள்கைகளை விளம்பரப்படுத்துவதை நிறுத்த வேண்டும். வீண் விளம்பரங்கள் மக்கள் மனதை புண்படுத்துவதோடு எதிர் விளைவுகளையும் ஏற்படுத்துகிறது. அரச தொடர்பு சாதனங்கள் மக்களின் உளப்பாங்கை மதிக்கவேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசியல் லாபங்களை கருதாது அரசின் கொள்கைகளை மக்கள் முன்வைக்க தகவல் சாதனங்கள் உதவ வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வரி விளம்பரம்

### கொழும்பு ஸ்ரூடியோ

நினைவஞ்சலி, சரமகவிக்கு தேவையான (Blo ks பழைய படங்களில் இருந்து அந்தியேட்டிக்குத் தேவையான புகைப்படங்கள், உறுதியான றபர்சீல்—ஸ்ரிக்கேஸ் தேவைப்படும்போது எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்: கொழும்பு ஸ்ரூடியோ 55 மணிக்கூட்டு வீ , யாழ்ப்பாணம். (6962)

### வைத்திய சேவை

இரெட்ணம் வைத்திய சாலை 129. ஸ்ரேஷன் றேட் யாழ்ப்பாணத்தில் சகல நோய்கட்கும் நவீனமருத்துவமுறைப்படி சிகிச்சையை வழங்குகிறது இரவு பகல் சேவையுடன் அவசர நோயாளர் தங்கும் வசதியும் உண்டு நிர்வாகி "இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவக் கலாநிதி" க. இராசரெட்ணம். (5285)

### வியாபாரிகட்கு

தரமான இமிரேசன் கோல்ட் கவறிங் நகைகள், லேஸ், நூல் வகைகள், எவர்சில்வர் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு அழகு சாதனப் பொருள்களை நிதான விலைக்கு மொத்தமாக பெற்றுக்கொள்ள-ஜெயா அழகுசாதன மாளிகை, 177-A, மின்சார வீதி, யாழ்ப்பாணம். (சி-6968)

### விற்பனைக்குண்டு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆலங்கட்டை றோட், வெள்ளாவத்தை, பொலிகண்டி. கற்கண்டு மாமா சைக்கிள்கடை பொலிகண்டி. (5331)

### தவறிவிட்டது

11-07-1993 அன்று திருமதி ஞானசக்தி (ஊர்காவற்றுறை) என்பவருடைய அடையாள அட்டை கிளாலியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஜீவா நிதிப் பொறுப்பாளர் கிளாலி, அல்லது ஈழநாதம காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (5351)

### தேவை

யாழ் நகர். நகரை அண்மித்த பகுதிக்குள் அலுவலக தேவைக்கு வீடு அல்லது கடை போன்ற இடம் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சோ. பிரபாகரன், நியூ சென்றல் பேக்கரி, 69, மவுண்கார்மல் வீதி, யாழ்ப்பணம். (5302)

### விஞ்ஞானதின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரியின் விஞ்ஞான தின விழா கல்லூரி நினைவு மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை 9 30 மணியளவில் நடைபெறும்.

கலாநிதி கா. சித்திரவடிவேலு இங்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

### கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று புதன்கிழமை காலை யூனிவேர்சல் கல்வி நிலையத்தில் நடைபெறும். (22)

### ஒய்வூதியம் வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு. நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஒய்வூதியம் பெறுவோருக்கான யூலை மாதக் கொடுப்பனவு தற்போது அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்படுவதாக அதன் முகாமையாளர் திரு. து. வசந்தகுமார் தெரிவித்துள்ளார். [22]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



"இசைக்கலைமணி", "சங்கீத கலா வித்தகி"

**அமரர் செல்வி ஞானாம்பிகை சின்னத்தம்பி**

இசையாசிரியை யா/இயற்றாலை அ. மி. த க. பாடசாலை
யா/நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம்

சேயாய் முன்னாள் 22-10-1966 — தெய்வமாய் இன்னாள் 16-06-1993

செல்வ மகளாய் எங்குடிப் பிறந்து
திருமகள் போலே சீக்கிரம் வளர்ந்து
நல்லிசை வளர்த்த நம்பெரு மாட்டி
நாட்டிற் குழைத்த நல்வழி காட்டி

ஞானாம் பிகைஎனும் நல்லிசைச் சிட்டு
ய வரும் விரும்பும மல்லிகை மொட்டு
தேனாம் பிகைஎமைத் தெருவினில் விட்டு
சென்றெங் கொழித்தாய் உன்நிலை கெட்டு?

இளகிய இதயம் இல்லையா நின்பால்
ஏங்குதே உள்ளம் இணையிலா அன்பால்
பழகிய நாளோ பாரிலே கொஞ்சம்
பாதியிற் பிரிந்தால் மறக்குமோ நெஞ்சம்?

16-07-93இல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உறறார், உறவினர், ஆசிரியர்கள், போராளிகள், நண்பாகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அவரது ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்

## தொலைந்த ஆள் அடையாள அட்டைக்கு புதிய நடைமுறை

(யாழ்ப்பாணம்)

தொலைந்த அடையாள அட்டைகளை மீளப் பெற்றுக்கொள்வதற்குப் பொலிஸ் முறைப்பாட்டிற்கு பதிலாகக் கிராம சேவகரின் முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்படுமென ஆட்பதிவு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி முறைப்பாடு செய்தல் சென்ற 12 5 93 இல் இருந்து தொடர்ந்து ஆறு மாதங்களிற்கு நீக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கிடையில் கிராமசேவகரின் முறைப்பாடு ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் ஆட்பதிவு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

மேலும் இந் நடைமுறையை ஒவ்வொரு உதவி அரச அதிபரும் தமது பிரிவிற்குட்பட்ட கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி நடவடிக்கை இங்கு பொலிஸ் முறைப்பாடு எடுக்க முடியாமையை அடுத்து மேற்கொள்ளப்பட்டுள்ளது. (பா)

### தளபாட விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டம் தமது பிரிவுக்குட்பட்ட தளபாடம் பற்றாக் குறையுள்ள பாடசாலைகளுக்குத் தளபாடங்களைத் தற்போது வழங்கி வருகின்றது. [42]

### பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தில் கல்வி பயிலும் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு உறுப்பினர்களுக்கான பயிற்சி வகுப்பு 14ஆம் திகதி (இன்று) மேற்படி பாடசாலை தற்போதுஇயங்கி வரும் ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரியில் நடைபெறும். சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் தீவகப் பிரிவினால் இப்பயிற்சி வகுப்பு நடாத்தப்படும். [22]


## சண்டிலிப்பாய் - சீரணி

ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்

தமிழீழ மக்கள், நலனுக்காக

**இலட்சார்ச்சனை விஞ்ஞாபனம்**

15-7-93 வியாழக்கிழமை ஆரம்பமாகி 23-7-93 வெள்ளிக்கிழமை வரை காலை 9மணி தொடக்கம் பி. ப. 12 30 மணிவரை நடைபெறும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகிறோம்.

தர்மகர்த்தாசபை

(5358)

தரத்தில் உயர்ந்தது — சுவை மிகுந்தது

சுத்தமான பசும் பாலைக் கொண்டு
வன்னிப் பிரதேசத்தில்
தயாரிக்கப்பட்ட

**"சிந்து பால், வெல்லம்"**

கொள்வனவு செய்வதற்கு நீங்கள் நாடவேண்டிய முகவரிகள் :

1. கொக்குவில் மொத்த விற்பனை நிலையம்
2. உதயம் பல்பொருள் அங்காடி (ஆரியகுளம் சந்தி)

இத்துடன்

மாட்டு வற்றலையும் பெற்றுக்கொள்ளலாம்.

விலை ரூபா 160/-

(சி-6994)


## 31-ம் நாள் நினைவலைகள்

## நினைவு கூருகின்றோம் ... 1993-07-14

1979ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்கா காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு சித்திரவதையின் பின் சடலமாக வீசப்பட்ட நாட்டுப்பற்றாளரான-

**இன்பம்** (விசுவஜோதி இரத்தினம் - நவாலி)

மற்றும் இவரது மைத்துனரான தமிழிளைஞன் இதே நடவடிக்கையின் பின் காணாமல் போன நவாலி, நல்லூர், சாவகச்சேரிப் பகுதிகளைச் சேர்ந்த 04 தமிழிளைஞர்கள்.

1986ஆம் ஆண்டு மட்டு - களுவாஞ்சிக்குடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு முல்லைத்தீவு - கொக்காவில் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் விவசாயி.

1989ஆம் ஆண்டு காரைநகர் - களபூமியில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த-

**நாகேஸ்** (பஞ்சாட்சரம் நாகேந்திரராசா- வேதரடைப்பு, காரைநகர் - யாழ்)

1990ஆம் ஆண்டு கொக்காவில் சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய-

**கோபி** ( - - அம்பாறை)

**லெப். மாவி** (பாலசிங்கம் பரமனாந்தம் - 156, மாவிவீதி, யோகபுரம் - முல்லைத்தீவு)

**லெப். சுமித்/சுமித்** (முத்துமாணிக்கம் சண்முகராசா • தென்னியங்குளம் - துணுக்காய்)

**லெப். நியூட்டன்** (பெ. புஸ்பராஜா - கிளிநொச்சி)

**2-ம் லெப். மாலா** (சிறீமதி அருளம்பலம் - நெடியகாடு- வல்வெட்டித்துறை)

**2-ம் லெப். அஜந்தா** (சுசீலா தங்கரத்தினம் - சுசீலா வீதி, கல்வியங்காடு - யாழ்)

கொக்காவில் முகாம் தகர்ப்பின் போது தப்பியோடிய சிறிலங்கா இராணுவத்தினருடன் பாலம் போட்ட பாலத்தடியில் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**ராஜு** (சுறுப்பையா தியாகராசா - ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

**பகீ/பகீர்** (கோவிந்தபிள்ளை சிவஞானம் - சில்வாவீதி, வட்டக்கச்சி)

யாழ் - மாவிட்டபுரத்தில் எதிர்பாராத வாகன விபத்தில் எமைப்பிரிந்த-

**கப்டன் சாளி** (தேவநேசன் சாளிஸ் ஜெகநேசன் - நவாலி தெற்கு - மானிப்பாய்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டு, ரயர் போட்டு எரிக்கப்பட்ட 28 தமிழர்கள்.

திருமலை - நிலாவெளி இடம்பெயர்ந்த முகாமில் வைத்து சிறிலங்காப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 06 தமிழர்கள்.

யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆகாய, கடல் வெளி நடவடிக்கையின்போது அப்பகுதி இராணுவத்தினருக்குத் துணையாக வெற்றிலைக்கேணியில் தரையிறக்கப்பட்ட இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**விஸ்வலிங்கம்** [செல்வராஜா சிவராஜா - அரசடித்தீவு, கொக்கட்டிச்சோலை - மட்டு.]

**கண்ணன்** [தர்மன்பிள்ளை ஏகாம்பரம் - களுவாஞ்சிக்குடி - மட்டு ]

**தவம்/தனம்** [அருளம்பலம் செளந்தரராஜன் - கூழாவடிக் குடியிருப்பு - மட்டு ]

**ஜெகன்** [கந்தசாமி சரவணபவன் - 3-ம் கட்டை, செல்வநாயகபுரம் - திருமலை]

**மேஜர் லவன்** [துரைசிங்கம் ராஜ்சங்கர் - ஈ. எஸ். பெர்ணான்டோ மாவத்தை - கொழும்பு-6

**லெப். கேணல் கூட்டி** [சின்னத்தம்பி இராசு செல்வேந்தி

## தவறிவிட்டது

11-07-1993 அன்று திருமதி ஞானசக்தி (ஊர்காவற்றுறை) என்பவருடைய அடையாள அட்டை கிளாலியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஜீவா நிதிப் பொறுப்பாளர் கிளாலி, அல்லது ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (5351)

## தேவை

யாழ் நகர். நகரை அண்மித்த பகுதிக்குள் அலுவலக தேவைக்கு வீடு அல்லது கடை போன்ற இடம் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சோ. பிரபாகரன், நியூ சென்றல் பேக்கரி, 69, மவுண்கார்மல் வீதி, யாழ்ப்பணம். (5302)

## தவறிவிட்டது

செல்லையா சிறீக்குமாரின் அடையாள அட்டை கோண்டாவிலுக்கும் உரும்பராய்க்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. (61211084V) கண்டு எடுத்தவர்கள் கோண்டாவில் அற்புத நார்த்தன விநாயகர் ஆலயத்தில் ஒப்படைக்கவும். (5371)

## கார் கசற் றேடியோக்களா? கடிகாரங்களா?

மேற்குறிப்பிட்டவை யாதேனும் பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடம் திருத்தக் கொடுத்து பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள் டில்கா வாச்அன் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-6937)

## நீர்றைக்கும் இயந்திரங்கள்

[தொல்புரம்]

குடாநாட்டு விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள் விரைவில்வழங்கப்படவுள்ளன.

யாழ். மாவட்ட விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு நூறு நீரிறைக்கும் இயந்திரங்கள் அண்மையில் கொழும்பிலிருந்து கப்பல்மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

இவ் இயந்திரங்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக கொழும்பு விலையில் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்களை கோரும் நடவடிக்கையினை பல சங்கங்கள் மேற்கொண்டுள்ளன. [41]

---

யா/நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம்

சேயாய் முன்னாள் — 22-10-1966

தெய்வமாய் இன்னாள் — 16-06-1993

செல்வ மகளாய் எங்குடிப் பிறந்து
திருமகள் போலே சீக்கிரம் வளர்ந்து
நல்லிசை வளர்த்த நம்பெரு மாட்டி
நாட்டிற் குழைத்த நல்வழி காட்டி

ஞானாம் பிகைஎனும் நல்லிசைச் சிட்டு
ய வரும் விரும்பும மல்லிகை மொட்டு
தேனாம் பிகைஎமைத் தெருவினில் விட்டு
சென்றெங் கொழித்தாய் உன்நிலை கெட்டு?

இளகிய இதயம் இல்லையா நின்பால்
ஏங்குதே உள்ளம் இணையிலா அன்பால்
பழகிய நாளோ பாரிலே கொஞ்சம்
பாதியிற் பிரிந்தால் மறக்குமோ நெஞ்சம்?

16-07-93இல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறறார், உறவினர், ஆசிரியர்கள், போராளிகள், நண்பாகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அவரது ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கரம்பைக் குறிச்சி,
வரணி.
(சி/6995)

அவரது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

---

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



வேலாயுதப்பிள்ளை ஆனந்தகுமார்

மலர்வு: 1971 05 10

உதிர்வு: 1993-06-12

இன்று 14-07-.993 நடைபெறவிருக்கும் எமது மகனின் அந்தியேட்டி கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்பர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மருதடி வீதி,
சாவகச்சேரி வடக்கு,
மீசாலை.
(சி/7003

உன் நினைவென்னும்
பெரு நெருப்பில் தினம்
உழலும்
அப்பா, அம்மா, தங்கை, தம்பிமார்.

---

வன்னிப் பிரதேசத்தில்
தயாரிக்கப்பட்ட

## "சிந்து பால்" வெல்லம்"

கொள்வனவு செய்வதற்கு நீங்கள் நாடவேண்டிய முகவரிகள் :

1. கொக்குவில் மொத்த விற்பனை நிலையம்
2. உதயம் பல்பொருள் அங்காடி (ஆரியகுளம் சந்தி)

இத்துடன்
மாட்டு வற்றலையும் பெற்றுக்கொள்ளலாம்.

விலை ரூபா 160/-

(சி-6994)

---

## 31-ம் நாள் நினைவலைகள்



## திரு. பரமசாமி சண்முகதாஸ்

தோற்றம்: 10-07-1960

மறைவு: 14-06-1993

குழந்தைத் தனமான உன்சிரிப்பும்
குதூகலமான உன் பேச்சும்
நிலையாக நிற்குதடா எம் நெஞ்சில்
துயர் தீர்க்கும் பிள்ளை என்று இருந்தோம்—இன்று
காவியமாக ஆகிவிட்டாய்
எம் மனதினிலே உன் நினைவு
மலையாக நிற்குதடா.

12, 4-ம் குறுக்குத் தெரு,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (5370)

உன் நினைவில் வாழும்
அப்பா, அம்மா, அக்கா, தம்பி,
தங்கை, மைத்துனர்,
மருமக்கள், உற்றார்,
உறவினர்கள்.

---

வைத்து சிறிலங்காப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 06 தமிழர்கள்.

யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆகாய, கடல் வெளி நடவடிக்கையின்போது அப்பகுதி இராணுவத்தினருக்குத் துணையாக வெற்றிலைக்கேணியில் தரையிறக்கப்பட்ட இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

விஸ்வலிங்கம் [செல்வராஜா சிவராஜா - அரசடித்தீவு, கொக்கட்டிச்சோலை - மட்டு.]

கண்ணன் [தர்மன்பிள்ளை ஏகாம்பரம் - களுவாஞ்சிக்குடி - மட்டு.]

தவம்/தனம் [அருளம்பலம் செளந்தராஜன் - கூழாவடிக் குடியிருப்பு - மட்டு ]

ஜெகன் [கந்தசாமி சரவணபவன் - 3-ம் கட்டை, செல்வநாயகபுரம் - திருமலை]

மேஜர் லவன் [துரைசிங்கம் ராஜ்சங்கர் - ஈ. எஸ். பெர்ணான்டோ மாவத்தை - கொழும்பு-6

லெப். கேணல் சூட்டி [சின்னத்தம்பி இராசு செல்வேந்திரன், கெருடாவில், சாவகச்சேரி - யாழ்.]

கப்டன் சோலை [சந்தியாப்பிள்ளை கிறிஸ்ரி கஜேந்திரன் - 4-ம் குறுக்குத்தெரு - பருத்தித்துறை]

லெப். யாதவன் [கந்தையா கமலக்கண்ணன் - 15/31, சந்தணமாதா ஒழுங்கை, பாண்டியன்தாழ்வு, யாழ் ]

லெப். குணேஸ் [செல்வராஜா பேரின்பமோகன் ஆதவன் 4-ம் வட்டாரம், புங்குடுதீவு - யாழ் ]

லெப். சந்திரன் [சங்கரப்பிள்ளை அன்பரசன் - "கயமுககிரி" நவாலி வடக்கு, மானிப்பாய் - யாழ்.]

லெப். மார்கிறட் [சாந்தி சிற்றம்பலம் – வேம்படி, உடுத்துறை வடக்கு - தாளையடி]

2–ம் லெப். பழனி [அந்தோனிப்பிள்ளை அருள்தாஸ் - கடற்கரை வீதி - பருத்தித்துறை]

றெஜி (பொன்னையா பத்மநாதன் - சங்கானைமேற்கு, பண்டத்தரிப்பு - யாழ்.)

பாரத் (இராசதுரை குணநாதன் - கற்பகப்பிள்ளையார் கோவிலடி உடுவில் கிழக்கு - யாழ்.)

சுரேஸ் (சுப்பிரமணியம் சிவகுமார் – சித்தங்கேணி, வட்டுக்கோட்டை கிழக்கு - யாழ்.)

நெல்லியடி - முடக்காட்டுப் பகுதியில் இரவுநேரம் தமது இல்லத்தில் உறங்கிக் கொண்டிருந்தபோது பலாலி முகாமிலிருந்து ஏவப்பட்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட எழுத்தாளர்(நெல்லைக பேரன்), அவரது மனைவி, மகள், மகன் ஆகிய 04 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு ஆனையிறவு - கறுக்காய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின்போது வீரச்சாவெய்திய -

கப்டன் சாதனன்/சாரணா/மாதா (றப்பியல் அந்தோனிராசா - தொட்டியடி வீதி - முல்லைத்தீவு)

கப்டன் தேனுகா/தேனுஜா (மதனிகா சிவலிங்கம் - உடுப்பிட்டி தொண்டமானாறு)

இயக்கச்சிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

மேஜர் பாலா (கிருஷ்ணன் தனபாலசிங்கம் - புத்தூர் கிழக்கு - யாழ்.

04-07-1992 அன்று புல்லாவெளியில் சிறிலங்கா இராணுவத்துடனான சமரில் விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

2–ம் லெப். கீர்த்தி/கதிரவன் (குணசேகரம் நகுலேஸ்வரன் - அரியாலை கிழக்கு - யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி-7000)

# கொள்ளையரை எதிர்த்தவர் புலி எனக் கூறி தடுத்துவைப்பு

(கொழும்பு)

கொள்ளையரை எதிர்த்துப் போராடிய ஹற்றன் வாலிபர் ஒருவர் விடுதலைப் புலி என்று கூறி கொள்ளையராலேயே பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் பாணந்துறை கெஸல்வத்தையில் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:- எம். புத்துச்சாமி என்ற இவ் வாலிபர் கெஸல்வத்தையில் மேசன் தொழில் செய்து வந்தார். கடந்த மாதம் 15ஆம் திகதி தனது மணிக்கூட்டையும் பணத்தையும் பறிக்க முயன்ற இருவரை எதிர்த்துப் போராடவே அவரை விடுதலைப்புலி எனக்கூறி கொள்ளையர் பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிசார் இவரை கடந்த 23ஆம் திகதி பாணந்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது வாதாடவோ பிணை நிற்கவோ எவரும் இல்லாததால் இவர் மீண்டும் பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டார்.

இனப்பிரச்சினைத் தீர்வு

# தனது யோசனையை ஏற்க சிறினிவாசன் வற்புறுத்து

(கொழும்பு)

தம்மால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை பாராளுமன்றத் தெரிவுக்குழு முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு இது "தவிர்க்க முடியாத ஒரு மாற்றீடு" என்றும கே. சிறினிவாசன் எம்.பி. தெரிவுக்குழுவிற்கு விடுத்துள்ள அவசர வேண்டுகோளில் கேட்டுள்ளார்.

தெரிவுக்குழு உறுப்பினர்க்கு அவசர வேணடுகோள் என்ற தலைப்பில் சிறினிவாசன் வெளியிட்ட இந்த அறிக்கையில், வடக்கு கிழக்கு மககளின் அரசியல் அபிலாசைகளுக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுத்து தென்பகுதி மக்களின் மனதிலுள்ள அர்த்தமற்ற அச்சத்தை அங்கீகரித்து தமிழ் மக்களின் துன்பங்களை கவனத்தில் எடுத்து அவர்கள் மேலும் கொலலப்படுவதை தடுகக 1987 ஜூலை 29ஆம் திகதிய இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு தவிர்க்க முடியாத ஒரு மாற்றீடாக சமஷ்டியை அடிப்படையாகக் கொண்ட யோசனை ஒன்றை நான் முன்வைத்தேன்.

என்னுடைய திட்டத்தை பூரணமாக ஏற்றுக்கொள்ளுமாறும் வடக்கு கிழக்கு மக்களின் அபிலாசைகளை மட்டுமன்றி இலங்கையில் ஒடுக்கப்படும் அனைத்து மக்களின் அபிலாசைகளையும் நிறைவு செய்யக் கூடிய விதத்தில் தேவையென்றால் இதனை பலப்படுத்துமாறும் தெரிவுக் குழுவை நான் கேட்டுக் கொள்கிறேன். முதலில் இலங்கையை சமஷ்டியாட்சி கொண்ட இலங்கை ஐக்கிய சமஷ்டி குடியரசாக செய்வோம். இது தெற்காசிய பிராந்தியத்தின் பொருளாதார - அரசியல் உறுதி தன்மைக்கும் உலக சமாதானத்திற்கும் ஒரு முக்கிய வரலாற்று பங்களிப்பை வழங்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தாண்டிக்குளம் தடைமுகாமில் இருவர் தடுத்து வைப்பு

(வவுனியா)

தடை செய்யப்பட்ட பொருள்களை எடுத்து வந்ததாக நபர் ஒருவர் தாண்டிக்குளம் தடைமுகாமில் சிறிலங்கா இராணுவத்தினரால் தடுத்து வைககப்பட்டுள்ளார். இவருடன் பெண்மணி ஒருவரும் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

சிறிலங்கா இராணுவத்தினரால் வடபகுதுக்குள எடுத்துச் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ள பொருள்களில் சிலவற்றை தம்முடன் எடுதது வந்த கிளிநொச்சி புதுமுறிப்பைச் சேர்ந்த நபர் ஒருவருரே இவ்வாறு இராணுவத்தினரால் தடுதது வைக்கப்பட்டுள்ளவராவார்.

# அரிசி இறக்குமதி இம்மாதம் முதல் நிறுத்தம்

இம்மாதத்தில் இருந்து நெல இறக்குமதியை அரசாங்கம நிறுததிவிட முடிவு செய்துள்ளது. இதனை உணவு இலாகா வட்டாரங்கள் தெரி[...] மூன்று நாடுகளுடன் செய்து கொளளப்பட்ட ஒப்பந்தத்தின் படி இரண்டு மாதத்திற்குள் 3,00,000 மெற்றிக்தொன் அரிசி இறககுமதிககு அனுமதி

# பொலிஸ் நிலையத்தில் திருடிய துப்பாக்கி மீட்பு

(கொழும்பு)

கொழும்பு பொலிஸ் நிலையம் ஒன்றிலிருந்து களவாடப்பட்டதாகக் கூறப்படும் கைத்துப்பாக்கி ஒன்று மோதரை கிம்புலஎல சேரிப பகுதியில் இருந்து பொலிசாரால் கைப்பற்றப்பட்டது.

பொலிசுக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து, அப் பகுதியைச் சோதனையிட்ட பொலிசார் குடிசை ஒன்றில் அக் கைத்துப்பாக்கி மறைத்து வைத்திருந்ததைக் கண்டு பிடித்தனர்.

இது தொடர்பாக நான்கு பேரை மோதரைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

அதேவேளை ஐந்து கடற்கொள்ளைக்காரரையும் பொலிசார் மோதரையில் கைது செய்துள்ளனர். கடற் கொள்ளைக்காரர் பிலிப்பைன்ஸ் மீன்பிடிப்படகு ஒன்றிலிருந்து களவாடிய 85,000 ரூபா பெறுமதியுள்ள மீன்பிடி வலைகளும் வீடொன்றிலிருந்து கைப்பற்றப்பட்டதாகக்கூறப்படுகிறது.

# கொழும்பு அகதிமுகாம்களை மூடிவிடத் தீர்மானம்

கொழும்பிலுள்ள அகதிமுகாம்களைமூடிவிட அரசுமுடிவெடுத்துள்ளது. இங்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம், மாணிக்கப் பிள்ளையார் ஆலயம், முகத்துவாரம் இமது கலாசார நிலையம் ஆகியவற்றிலுள்ள அகதிமுகாம்களில் 2000க்குமேற்பட்ட அகதிகள் தங்கியுள்ளனர். இவர்களில் அனேகர் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இம்முகாம்கள் இம்மாதம் 22ஆம் திகதியுடன் மூடப்படலாம் என தெரியவருகிறது.

கிராமசேவையாளர் நியமனம்

# பொலிஸ் சான்றிதழ் சிலருக்கே தேவையாம்

(யாழ்ப்பாணம்)

கிராமசேவை அலுவலர்களாக நியமிக்கப்படவுள்ளவர்கள் அனைவருக்கும் பொலிஸ் அறிக்கை அல்லது பிரதேச செயலாளரின் இரகசியச் சான்றிதழ் தேவையில்லையென்று தெரியவருகிறது.

மேற்படி நியமனத்துக்காக போட்டிப்பரீட்சை மூலமும், நேர்முகப் பரீட்சை மூலமும் தெரிவு செய்யப்பட்டவர்களில் ஒரு சிலருக்கு மட்டுமே மேற்படி ஆவணம் தேவைப்படுவதாக கூறப்படுகிறது பொது நிர்வாக மாகாண சபைகள் அமைச்சு அதிகாரிகளே மேற்படி ஆவணம் தேவைப்படுபவர்களைத் தீர்மானிப்பார்கள் என்றும் கூறப்படுகிறது.

மேற்படி ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதும் தெரிவு செய்யப்பட்ட அனைவருக்கும் நியமனம் வழங்கப்படவுள்ளதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நியமனங்கள் காலக்கிரமத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. (க)

# அ. தி. மு. க - காங்கிரஸ் வேற்றுமைகளை மறக்கவும்

## பொதுவுடமைக் கட்சித் தலைவர்

(சென்னை)

நாட்டு நலனையும் மாநிலத்தின் நலனையும் கருத்தில் கொண்டு அனைத்து இந்திய அண்ணா தி. மு. கழகமும், இந்திரா காங்கிரசும் தங்களுக்கிடையே உள்ள வேற்றுமைகளைக் களைந்து மீண்டும் இணைய வேண்டும் என்று இந்திய ஐக்கிய பொதுவுடமைக் கட்சியின் பொதுச்செயலாளர் மொகித் சென் கூறியுள்ளார்.

கோயம்புத்தூரில் செய்தியாளரிடம் பேசிய அவர், புலிகள் அமைப்புகள் போன்ற அமைப்புகளிடமிருந்து கடும் அச்சுறுத்தல்களைக் கருத்தில் கொண்டு இந்திரா காங்கிரஸ், அனைத்து இந்திய அண்ணா தி. மு. க. மற்றும் இடதுசாரிக் கட்சிகள் தமக்கிடையில் நட்புறவை மீண்டும் ஏற்படுத்த முயல வேண்டும் என்றார்.

தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் தேசிய முன்னணியுடனான தங்கள் உறவைத் துண்டித்து விட்டு. இந்திய கமயூனிஸ்ட் கட்சியும், மார்க்சியக கமயூனிஸ்ட் கட்சியும் முற்போக்கு ஜனநாயகக் கட்சிகளுடன் இணைய வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# அலரிமாளிகை பொருள்கள் திருட்டுப் போகவில்லை

## கலாநிதி விமல் விக்கிரமசிங்க

(கொழும்பு)

முன்னாள் பிரதமர்களுக்கு வெளிநாட்டுத் தலைவர்களும் முக்கிய பிரமுகர்களும் வழங்கிய அன்பளிப்பு பொருள்கள் எதுவும் அலரிமாளிகையிலிருந்து காணாமற் போகவில்லை என்று பாராளுமன்றத்தில் அண்மையில் தெரிவிக்கப்பட்டது.

சபை ஒத்திவைப்பு வேளையில் சுதந்திரக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வாவின் கேள்விக்கு பதிலளித்துப் பேசிய பாராளுமன் றவிவகார அமைச்சர் கலாநிதி விமல் விக்கிரமசிங்க மேலும் கூறுகையில், அலரி மாளிகையில் 1979-ம் ஆண்டில் இருந்த பொருள்களின் பட்டியலுக்கும் இப்போதுள்ள பொருள்களின் பட்டியலுக்கும் இடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. சில பொருள்கள் மேலதிகமாக காணப்படுகின்ற அதேவேளை சில பொருள்கள் அப்புறப்படுத்தப்படுகின்றன. கதவு, திரைச்சீலைகள், உடைந்த தளபாடங்கள், பிளாஸ்டிக் பொருள்கள் போன்ற விலை மதிப்புக் குறைந்த பொருள்களே அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலதிகமாக உள்ள பொருள்கள் புதிய பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. எந்தப் பொருளுமே களவாடப்பட்டதாக இரகசிய பொலிசார் விசாரணை எதையும் நடத்தவில்லை. இது குறித்து அரசு எதையும் அறிந்திருக்கவும் இல்லை எனவும் தெரிவித்தார்.

# தமிழ் அகதிகளை விரட்டிட மறைமுக முயற்சி நடக்கிறது

## சென்னையிலுள்ள தமிழ் அகதிகள்

(சென்னை)

சென்னையிலுள்ள இலங்கைத் தமிழரை விரட்டியடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தமிழ் அகதிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்; சுயமாக நாடு திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகள் மாத்திரமே திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று இந்தியா கூறுகின்ற போதிலும் தமிழ் நாடு அகதிகள் முகாமின் நிலமைகள்மோசமடைவதை அனுமதிப்பதன் மூலமாக இலங்கைத் தமிழர்களை விரட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

ஒரு புறத்திலே இந்தியாவில் அகதிகளின் நிலமை மோசமடைகின்றது. மறுபுறத்தில் இலங்கையில் போர் இன்னமும் தொடர்கின்றது. இந்நிலமையில் இந்தியாவிலுள்ளோரை நாடு திரும்புமாறு கோருவது இந்தியாவில் போசாக்கின்மையால் சாவதையா அல்லது இலங்கையில் துப்பாக்கிக்குண்டால் சாவதையா விரும்புகிறீர்கள் என்று கேட்பதற்கு சமனாகும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை தமிழ்நாடு அகதிகள் முகாமில் உணவுப் பங்கீடு போதுமானதாக இல்லை. அகதி முகாம்களின் நெரக்கட்டுப்பாடு தொழில் வாய்ப்பை தேடிக்கொள்ளவும் தடுக்கின்றது. அரச சார்பற்ற நிறுவனங்கள் அகதி முகாம்களுக்குவரமுடியாதவாறு தடையும் விதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது.

# அமைதியாக போராடிய காங்கிரசார் மீது தாக்குதல்

## வாழப்பாடி குற்றச்சாட்டு

(சென்னை)

இந்திரா காங்கிரஸ்கட்சியின் முழு அடைப்புப் போராட்டத்தை முறியடிப்பதற்காக அனைத்து இந்திய அண்ணா தி. மு கழகத்தினர் காவல் துறையின் ஒத்துழைப்போடு காங்கிரஸ் தொண்டர்களை தாக்கியதாக தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த வன்முறைச் சம்பவங்கள் குறித்து பிரதமர், மத்திய உள்துறை அமைச்சர், மாநில ஆளுநர் ஆகியோரிடம் முறையிடப்படடிருப்பதாகவும், [...] முறையை மீறி முழு அடைப்புப் போராட்டம் வெற்றியடைந்திருப்பதாக வாழப்பாடி ராமமூர்த்தி கூறினார்.

ஒரு பத்திரிகையின் புகைப்படக் கலைஞர் ஒருவர் வீதி மறியலைப் புகைப்படம் எடுக்க முயன்றதற்காக பொலிசாரால் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், இதைத்தான் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் கூறினார்.

நேற்று அதிகாலை முதல் அனைத்து இந்திய [...]

# ஜோன் மேஜர் செல்வாககு சரிவு

(லண்டன்)

பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜருக்கு மக்கள் மத்தியிலிருந்த வரவேற்பு வெகுவாக வீழ்ச்சி கண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. கடந்த வாரம் கார்டியன் பத்திரிகை நடத்திய அபிப்பிராய வாக்கெடுப்பில் 14 சதவீத மக்கள் மட்டுமே பிரிட்டிஷ் பிரதமர் மேஜர் சிறந்த பணி செய்வதாக ஏற்றுக்கொண்டனர். ஏனையோர் இவர் இந்த அரசாங்கத்தை எங்கே இட்டுச் செல்கிறார்எனக் கேள்வி எழுப்பினர்.

இவ்வாறான கருத்துக் கணிப்பீடுகள் 1938-ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருவதாகவும் இப்போதைய பிரத[...]

# தாண்டிக்குளம் தடைமுகாமில் இருவர் தடுத்து வைப்பு

(வவுனியா)

தடை செய்யப்பட்ட பொருள்களை எடுத்து வந்ததாக நபர் ஒருவர் தாண்டிக்குளம் தடைமுகாமில் சிறிலங்கா இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவருடன் பெண்மணி ஒருவரும் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

சிறிலங்கா இராணுவத்தினரால் வடபகுதுக்குள எடுத்துச் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ள பொருள்களில் சிலவற்றை தம்முடன் எடுதது வந்த கிளிநொச்சி புதுமுறிப்பைச் சேர்ந்த நபர் ஒருவருரே இவ்வாறு இராணுவத்தினரால் தடுதது வைக்கப்பட்டுள்ளவராவார்.

# அரிசி இறக்குமதி இம்மாதம் முதல் நிறுத்தம்

இமமாதத்தில் இருந்து நெல இறக்குமதியை அரசாங்கம நிறுததிவிட முடிவு செய்துள்ளது. இதனை உணவு இலாகா வட்டாரங்கள் தெரிவககின்றன.

போதிய அரிசியைக் கையிருப்பில வைததிருபபதற்காக 2,50,000மெறறிக தொன அரிசியை இறககுமதி செய்வதறகு மூன்று நாடுகளுடன் செய்து கொளளப்பட்ட ஒப்பந்தத்தின் படி இரண்டு மாதத்திற்குள் 3,00,000மெறறிக்தொன் அரிசி இறககுமதிககு அனுமதி அளிககப்படும.

நெல் விளைச்சல் அதிகரிப்பே இவ் இறககுமதி தடைக்குக் காரணம எனத தெரிவிக்கப்படுகின்றது.

# அ. தி. மு. க - காங்கிரஸ் வேற்றுமைகளை மறக்கவும்

## பொதுவுடமைக் கட்சித் தலைவர்

(சென்னை)

நாட்டு நலனையும் மாநிலத்தின் நலனையும் கருத்தில் கொண்டு அனைத்து இந்திய அண்ணா தி. மு. கழகமும், இந்திரா காங்கிரசும் தங்களுக்கிடையே உள்ள வேற்றுமைகளைக் களைந்து மீண்டும் இணைய வேண்டும் என்று இந்திய ஐக்கிய பொதுவுடமைக் கட்சியின் பொதுச்செயலாளர் மொகித் சென் கூறியுள்ளார்.

கோயம்புத்தூரில் செய்தியாளரிடம் பேசிய அவர், புலிகள் அமைப்புகள் போன்ற அமைப்புகளிடமிருந்து கடும் அச்சுறுத்தல்களைக் கருத்தில் கொண்டு இந்திரா காங்கிரஸ், அனைத்து இந்திய அண்ணா தி. மு. க. மற்றும் இடதுசாரிக் கட்சிகள் தமக்கிடையில் நட்புறவை மீண்டும் ஏற்படுத்த முயல வேண்டும் என்றார்.

தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் தேசிய முன்னணியுடனான தங்கள் உறவைத் துண்டித்து விட்டு. இந்திய கபயூனிஸ்ட் கட்சியும், மார்க்சியக கபயூனிஸ்ட் கட்சியும் முற்போக்கு ஜனநாயகக் கட்சிகளுடன் இணைய வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# தமிழக காவல்துறை மீது நடவடிக்கை எடுக்கவும்

## பத்திரிகையாளா கோரிக்கை

(சென்னை)

காங்கிரஸ் கட்சி நடத்திய கடையடைப்பு போராட்டத்தை படம் பிடித்த நிருபர் கைது செய்யப்பட்டதையும், அவரது கமெராவும், புகைப் படச் சுருளும் பறிக்கப்பட்டதையுமிட்டு தமிழக பத்திரிகையாளர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சங்கத் தலைவர் ஆர். பாலு வெளியிட்ட அறிக்கையொன்றில் தமிழக அரசு இச் சம்பவம் தொடர்பாக பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும் என்றும், சம்பந்தப்பட்ட காவல் துறையினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கியூ சம்பென் நாடு திரும்பினார்

கம்போடியாவில் கமரூச் தலைவர் கியூ சம்பென் நேறறு மீண்டும் தலைநகர் நொம் பென்னுக்கு திரும்பியுள்ளார். நாட்டின் எதிர்காலம் தொடர்பாக தமது அணி எந்தவகையான பங்கைச் செலுத்த முடியும்என்பதுபற்றி ஆராய்வதே அவரது விஜயத்தின் நோக்கம் என்று தெரியவருகிறது.

# அமைதியாக போராடிய காங்கிரசார் மீது தாக்குதல்

## வாழப்பாடி குற்றச்சாட்டு

(சென்னை)

இந்திரா காங்கிரஸ்கட்சியின் முழு அடைப்புப் போராட்டததை முறியடிப்பதற்காக அனைத்து இந்திய அண்ணா தி. மு கழகத்தினர் காவல் துறையின் ஒத்துழைப்போடு காங்கிரஸ் தொண்டர்களை தாக்கியதாக தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த வன்முறைச் சம்பவங்கள் குறிதது பிரதமர், மத்திய உள்துறை அமைச்சர், மாநில ஆளுநர் ஆகியோரிடம் முறையிடப்படடிருப்பதாகவும், நாளை ஆளுநர் சென்னா ரெட்டியைச சந்தித்து மாநில அரசின் அடக்கு முறைப்போக்கைப் பற்றி எடுத்துரைக்க இருப்பதாகவும் அவர் கூறினார்.

சென்னையில் நேற்றுச் செய்தியாளரிடம் பேசிய அவர் அமைதியான முறையில் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட முயன்ற காங்கிரஸ் தொண்டர்கள் மீது அண்ணா தி. மு கழகத்தினர் கடும் தாக்குதல் நடத்தினார்கள் என்றும், இதில் பல இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் காயமடைந்திருப்பதாகவும், சுமார் 15,000 காங்கிரஸ் தொண்டர்கள் கைது செய்யப் பட்டிருப்பதாகவும் கூறினார். மாநில அரசின் அடக்குமுறையை மீறி முழு அடைப்புப் போராட்டம் வெற்றியடைந்திருப்பதாக வாழப்பாடி ராமமூர்த்தி கூறினார்.

ஒரு பத்திரிகையின் புகைப் படக் கலைஞர் ஒருவர் வீதி மறியலைப் புகைப்படம் எடுக்க முயன்றதற்காக பொலிசாரால் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், இதைத்தான் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் கூறினார்.

நேற்று அதிகாலை முதல் அனைத்து இந்திய அண்ணா தி. மு. கழகத்தினர் சென்னை தொலைக்காட்சி நிலையத்தின் முன் மறியல் போராட்டம் நடத்தியதாகவும், இந்த முழு அடைப்புப் போராட்டத்தைப் பற்றிய உண்மையான தகவல்கள் தொலைக் காட்சி மூலம் காட்டப்படாமல் தடுக்கும் முயற்சி இது என்றும் வாழப்பாடி ராமமூர்த்தி குற்றம் சாட்டினார். இது குறித்து மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சருக்குத் தந்தி மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

# ஜோன் மேஜர் செல்வாககு சரிவு

(லண்டன்)

பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜருக்கு மக்கள் மத்தியிலிருந்த வரவேற்பு வெகுவாக வீழ்ச்சி கண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. கடந்த வாரம் கார்டியன் பத்திரிகை நடத்திய அபிப்பிராய வாக்கெடுப்பில் 14 சதவீத மக்கள் மட்டுமே பிரிட்டிஷ் பிரதமர் மேஜர் சிறந்த பணி செய்வதாக ஏற்றுக்கொண்டனர். ஏனையோர் இவர் இந்த அரசாங்கத்தை எங்கே இட்டுச் செல்கிறார்எனக் கேள்வி எழுப்பினர்.

இவ்வாறான கருத்துக் கணிப்பீடுகள் 1938-ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருவதாகவும் இப்போதைய பிரதமரைப் போல் எந்தப் பிரதமரும் தனது செல்வாக்கை இழந்ததில்லை என கார்டியன் பத்திரிகை கூறுகிறது.

## ஜப்பானில் பூகம்பம்

ஜப்பானில் அண்மையில் ஏற்பட்ட பூகம்பத்தால் ஐம்பதுக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். நூற்றுக்கும் அதிகமானோரைக காணவில்லை.

தலைநகருக்கு தெற்கே கடந்த பத்து ஆண்டு காலத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய பூகம்பம் என்று இது வர்ணிககப்படுகிறது பூகம்பத்தின் அளவு 7.8 புள்ளி என்று அளவிடப்பட்டிருப்பதுடன் மீட்பு பணிகளும் துரிதமாக்கப்பட்டுள்ளன.


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
26-07-1972

வீரச்சாவு
14-07-1991

**வீரவேங்கை றெஜி**
பொன்னையா பத்மநாதன் [பற்பர்]
[வடலியடைப்பு]

**14-07-1993**

உரிமையுடன் உனது பங்கினை ஆற்றச் சென்ற- நீ
தனி வழியே தனிமையாகப் போராட்டப்
பாசறையை அடைந்தாய்
உறுதியுடன் உக்கிரமான களமாடினாய்
இறுதியில் 20 போராளியுடன்
வீரமரணத்தை தழுவினையோ
இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன உன்
போராட்டப் பாதை வழியில் நீண்டு கொள்ளட்டும்.

உமது பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா,
அக்காமார், அண்ணா, தம்பி,
அத்தான்.

தற்போதைய முகவரி:
நவாலி தெற்கு,
மானிப்பாய். (5340)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி





ஆண்டவன் படைப்பு:
26-02-79 மாலினி
21-10-81 ஜெயந்தினி
25-03-83 ஜனகன்
09-09-86 திபாகரன்


பாதகர் அழிப்பு:
14 — 07 — 1991

இரண்டாண்டு ஓடி மறைந்தாலும் இரக்கமே இல்லாத பாவிகள் வெற்றிலைக் கேணியில் செய்த கொடூரச் செயலால் எம்மை விட்டுப் பிரிந்த ஆருயிர்ச் செல்வங்களை எங்களால் மறக்கவே முடியாது. உங்கள் நால்வரினதும் உங்களுடன் மரித்த இருவரினதும் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும் வேண்டுகின்றோம்.

வெற்றிலைக்கேணி.
(சி-7001)

உங்கள் பிரிவால் வாடும்,
தாய். தந்தை, சகோதரன், சகோதரி மற்றும் உறவினர்கள்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
20-08-1902

உதிர்வு:
06-07-1991

**சின்னப்பு முத்துவேலு**
(ஓய்வுபெற்ற உதவி அத்தியட்சகர், நிலஅளவைப்பகுதி)

கற்பனவும் கற்பனையும் நினைவுமெல்லாம்
சொற்பனமாய்ச் சென்றிடவோ இத்தரையில்
வந்து சென்றீர்.

தங்கள் ஆத்மசாந்திக்காக வல்லவனை வாழ்த்தும்
மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரர், பூட்டர்.

பரதன் வீதி.
(டிஸ்பென்சரி வீதி),
உரும்பராய்.

(5363)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### கடற்புலி 2-ம்லெப். பழனி

[அந்தோனிப்பிள்ளை அருள்தாஸ்]

மலர்வு: 17-12-1978 வீரச்சாவு: 14-07-1991

வீரப்புலியாய் வீறு கொண்டெழுந்தாய்
வீர சாதனைகள் பல புரிந்தாய்
கட்டைக் காட்டினிலே நீசர்களை அழித்து
ஆகுதியாகினாய்
உடல் அழிந்தாலும் பழனி தந்து சென்ற
திடமான தமிழீழக் கொள்கைகளோ அழியாது
தறிக்கத் தறிகக தளிர்த்தெழுவோம்!
இது உறுதி! இது உறுதி
விழுத்த விழுத்த விழுந்தெழுவோம்! இது உறுதி
எம தாகம் தமிழீழத் தாயகமே! இது உறுதி.

அருள்தாசின் ஆத்ம சாந்திக்காக பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் 14-07-93 (இன்று) காலை 6.15 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

முனை.
பருததித்துறை.
(5364)

இவரின் பிரிவால் வாடும்
பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்கள்.

## 1-ம் ஆண்டு நினைவாக...!



தாயின் மடியில்: 21-07-1964

தாயக மடியில்: 14-07-1992

### மேஜர் பாலா

## தொலைக்காட்சி நிலையம் முன்பாக அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம் பொலிஸ் அனுமதி?

### தி.மு.க. கண்டனம்

(சென்னை)


சென்னையிலுள்ள தொலைக் காட்சி அஞ்சல் நிலையத்தின் முன்பாக அ.தி.மு.கவினர் சூழ்ந்து முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தியதை காவல்துறையினர் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர் என்று தி.மு.க. நேற்று முன்தினம் சென்னையில் வெளியிட்ட அறிக்கையொன்றில் குற்றம் சாட்டியுள்ளது.

இடதம்வளை மற்றக் கட்சிகள் நடத்தும் போராட்டத்தைக் கண்டுகொள்ளாத சென்னையிலுள்ள தொலைக்காட்சி நிலையம் காங்கிரஸ் கட்சி நடத்திய கடையடைப்பு போராட்டம் பற்றிய செய்திகளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து ஒளிபரப்பியதையும் தி.மு.க. கண்டித்துள்ளது.

### விரைவில் தேர்தல்?

உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், மத்தியபிரதேசம் இமாசலப் பிரதேசம் ஆகியவற்றில் மாநில சட்டப் பேரவைகளுக்கான தேர்தல்கள் விரைவில் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 2-ம் ஆண்டின் நீங்காத நினைவலைகள்



### லெப்டினன்ட் யாதவன்

(கந்தையா கமலக்கண்ணன்)

மலர்வு 26. 08. 1969 இலட்சியவீரனாய்: 14. 07. 1991

புரட்சி என்னும் புனிதப் போர்களிலே
பெரும் புலியாய் திகழ்ந்தவன் - இன்று
விடுதலை என்னும் உயரிய வாழ்வுக்காய்
தன்னை உவந்தழித்தான் - இவன்
வரலாற்றின் ஓர் அடிச்சுவடாய்
வரிப்புலி சரித்திரத்தில் இடம்பெற்றான்
இவன் செய்தி கேட்ட எம் இதயங்கள்
இன்று இவன் நினைவால் தவிக்கின்றன.

அன்று இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட அனைத்துப் போராளிகளுக்கும் எமது வீர அஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆறாத்துயரில் வாடும்

## திருடிய மகனை கொல்ல தந்தை அனுமதி

(நைரோபி)

திருட்டுக் குற்றஞ்சாட்டப்பட்ட மகனை கல்லெறிந்து கொல்ல தந்தை உதவிய சம்பவம்ஒன்று கென்யாவில் நடைபெற்றுள்ளது. இச்சம்பவம் குறித்து கென்யா டைம்ஸ் வெளியிட்ட செய்தியில் கார் ஒன்றின் உதிரிப்பாகங்களை திருடிய ஓர்இளைஞன் தப்பிக்க முயன்றபோது பொதுமக்களால் இவர் பிடிக்கப்பட்டார்.

பிடித்தவர்கள் இவரை தந்தையின் வீட்டுக்கு இழுத்துச் சென்று அவரை குற்றத்தை ஏற்க வைத்தனர். தொழில் அமைச்சில் பணியாற்றும் தந்தைதனதுமகனின் கைகளை கட்டி பின்னர் மக்கள் கூட்டத்தை கல்லெறிந்து தமது மகனை கொல்லுமாறு பணித்தார்.

கடந்தவருடம் கொலைகளவிற்காக 400பேர் கென்யாவில் கல்லெறிந்து கொல்லப்பட்டனர்.

## உறவு தேவையில்லை

அ.தி.மு.க வுடன் மீண்டும் உறவை ஏற்படுத்திக் கொள்ளும் அவசியம் காங்கிரசிற்கு இல்லை எனத் தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி மீண்டும் கூறியுள்ளார். பாராளுமன்றில் நரசிம்மராவ் அரசிற்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவரத் திட்டமிட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது அ.தி.மு.க. உறுப்பினர்களின் ஆதரவைக் காங்கிரஸ் நாடாது என்றும் அவர் கூறினார்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி





| வீரவேங்கை வராகன் | | வீரவேங்கை ரமேஷ் |
|---|---|---|
| [சின்னத்துரை சர்வகுமார்] | | [சின்னத்துரை சபேசன்] |
| 04. 10. 1972 | < அன்னையின் மடியில்: > | 16. 12. 1976 |
| 18. 07. 1991 | < தமிழ்த்தாயின்மடியில்: > | 14. 07. 1991 |

எண்ணத்தில் இனிக்கும் எங்கள் புதல்வரே
மண்ணின் துயரதனை மனதினிற் சுமந்து
மானம் நிறைந்த புலிகளாய் நிமிர்ந்து
ஈனம் கொண்டோரை அழித்திடச் சென்றீர்!
ஆனையிறவுப் போரதனில் அண்ணன் சாய
அடுத்த நாள் தம்பியவன் மணலாற்றில் சாய்ந்தான்
சேனை விழுத்திச் செருக்களம் கலக்கிய
செயல் வீரம் நிறைந்திட்ட சின்னப் பூக்களே!
விழிகளில் நீரது நிரம்பியே வழிந்திட
அழிந்திடா உங்கள் நினைவுகள் சுமக்கிறோம்
வித்தாகி வீழ்ந்த நீவிர் மீண்டுமிங்கே
விருட்சமாய் எழும்நாளை எண்ணிக் கிடக்கிறோம்!

அம்மா, அப்பா, சகோதரர்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்

அளவெட்டி வடக்கு.

(5368)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## 1-ம் ஆண்டு நினைவாக...!



தாயின் மடியில்:

21-07-1964

தாயக மடியில்:

14-07-1992

**மேஜர் பாலா**

(கிருஸ்னன் குணபாலசிங்கம்)

புத்தூர் கிழக்கு, புத்தூர்

எமது மண்ணை ஏறி மிதிக்க வந்த
எதிரியின் பாசறைக்குள் நுழைந்து
தேசத்தை காப்பதற்காய்
தேகத்தையும் கொடுத்து
வாச மலராக வரலாற்றில் வாழ்கின்றாய்
பாலா
உன் இழப்பால் தாயகம் முளைக்கிறது
அதில்
உன் முகமும் தெரிகிறது.

(5366) குடும்பத்தினர். நண்பர்கள்

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 17 – 02 – 1971



வீரச்சாவு: 14 – 07 – 1991

**லெப்டினன்ட் மாக்கிறெட்**

(சிற்றம்பலம் சாந்தினி)

ஆண்டிரண்டு சென்றாலும் ஆறாது எம்துயரம்
ஈழமண்ணை மீட்கவென்று அண்ணன் காட்டிய
பாதையிலே அன்புடனே சென்றாயம்மா
வெற்றிலைக் கேணிதனில் எதிரிப்படை வீழ்த்தையிலே
மார்பினிலே குண்டுபட்டு மாவீரர் ஆனாயம்மா.

இன்று (14-07-93) நடைபெறும் ஆத்மசாந்தி வைபவத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு போராளிகள், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கிறோம்.

உடுத்துறை,
வேம்படி,
வடமராட்சி கிழக்கு.

இவர் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
(5222)



**லெப்டினன்ட் யாதவன்**

(கந்தையா கமலக்கண்ணன்)

மலர்வு: 26. 08. 1969

இலட்சியவீரனாய்: 14. 07. 1991

புரட்சி என்னும் புனிதப் போர்களிலே
பெரும் புலியாய் திகழ்ந்தவன் - இன்று
விடுதலை என்னும் உயரிய வாழ்வுக்காய்
தன்னை உவந்தழித்தான் - இவன்
வரலாற்றின் ஓர் அடிச்சுவடாய்
வரிப்புலி சரித்திரத்தில் இடம்பெற்றான்
இவன் செய்தி கேட்ட எம் இதயங்கள்
இன்று இவன் நினைவால் தவிக்கின்றன.

அன்று இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட அனைத்துப் போராளிகளுக்கும் எமது வீர அஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆறாத்துயரில் வாடும்
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
சகோதரிகள், நண்பர்கள்.

70, 2, புங்கன்குளம் வீதி,
ஆரியாலை.

(5362)

## 2-ம் வருட நினைவஞ்சலி



தாயின் மடியில்

30- 05- 1974

தாயக விடிவில்

14- 07- 1991

**கப்டன் சோலை**

[கிறிஸ்ரி கஜேந்திரன்]

யாழ்/கொய்யாத்தோட்டம், நெடுந்தீவு கிழக்கு

ஊர்துறந்து பருத்தித்துறை நோக்கி வந்து
ஒண்கலையின் சுடரெறிக்கும் சித்திவிநாயகர்
வித்தியாலயமாம்
பேர் சிறந்த மகாவித்தியாலயத்திற்
பிறங்கு கலை கற்று விளையாட்டுத் துறையில்
தேர்ந்தவுயர் கப்ரினாய்த் திகழ்ந்து நல்ல
தியாக சிந்தை மேலிட்டுத் தமிழ் மண் மீட்கும்
ஆர்வமொடு வயவேங்கை இயக்கஞ் சேர
அனைத்தையுமே ஆர்ப்பணித்த அழகுமாரா!
பருவத்தின் சுகபோகம் ஒன்றுங் காணாய்
பயந்தோடிப் புறங்காட்டாய் கட்டைக் காட்டில்
மருமத்திற் குண்டேற்று விழுப்புண் பட்டாய்
மரபுயர்ந்த மானத்தை மண்ணைக் காத்தாய்
காவியுகு கண்ணீரோ டஞ்சலித்தோம்
கத்தனவன் நித்தியத்திற் சாந்தி கொள்வாய்!

அன்புக்கினிய
குடும்பத்தினர்.

புலோலி,
பருத்தித்துறை.

(சி-7004)

எண்ணத்தில் இனிக்கும் எங்கள் புதல்வரே
மண்ணின் துயரதனை மனதினிற் சுமந்து
மானம் நிறைந்த புலிகளாய் நிமிர்ந்து
ஈனம் கொண்டோரை அழித்திடச் சென்றீர்!
ஆனையிறவுப் போரதனில் அண்ணன் சாய
அடுத்த நாள் தம்பியவன் மணலாற்றில் சாய்ந்தான்
சேனை விழுத்திச் செருக்களம் கலக்கிய
செயல் வீரம் நிறைந்திட்ட சின்னப் பூக்களே!
விழிகளில் நீரது நிரம்பியே வழிந்திட
அழிந்திடா உங்கள் நினைவுகள் சுமக்கிறோம்
வித்தாகி வீழ்ந்த நீவிர் மீண்டுமிங்கே
விருட்சமாய் எழும்நாளை எண்ணிக் கிடக்கிறோம்!

அம்மா, அப்பா, சகோதரர்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்

அளவெட்டி வடக்கு.

(5368)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

14-07-1993



**லெப். கேணல் சூட்டி**

**(இராசு செல்வேந்திரன்)**

தமிழ் மண்ணில்
**28-05-1967**

தமிழர் மனங்களில்
**14-07-1991**

பூந்தளிர் மேனியாய் புவியிலே திரிந்தவன்
பூகம்ப மனிதனாய் எப்படி மாறினாய்
ஊருக்குள் உலவிய தென்றல் நீ
உரிமைப் போரதில் எப்படி புயலாய் ஆகினாய்
காலத்தின் தேவைக்காய் கடமை அழைத்ததா
காவிய நாயகன் கரம் தொட்டு வளர்த்ததா?

குடும்பத்தினர், நண்பர்கள்.

கெருடாவில்,
சாவகச்சேரி

[5369]

### சிந்தனைக்கு

ஒழுக்க ரீதியான சீர்திருத்தத்தைத் தவிர, வேறெல்லா சீர்திருத்தமும் பயனற்றதாகவே அமையும்.

— தோமஸ் கார்லைல்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 14-07-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## டி. பி. விஜயதுங்காவும் ஐ. தே. க. சீரமைப்பும்

ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரபீடம் தன்னை சீரமைத்துக் கொள்ளும் முக்கிய பணியில் ஈடுபட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்ட முரண்பாடுகள், மோதல்கள் என்பனவற்றால் வெளியேறியவர்களை இணைத்துக் கொள்வதன் மூலம் மீண்டும் தன்னை ஒரு பலம் பொருந்திய அமைப்பாக நிறுவிக் கொள்வதில் ஐக்கிய தேசியக் கட்சி முனைப்பாக ஈடுபட்டுள்ளது.

இச்சீரமைப்பு நடவடிக்கையின் போது, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவால் வெளியேற்றப்பட்டவர்கள், விரட்டப்பட்டவர்கள், தாமாகவே வெளியேறியவர்கள் எனப் பலவகைப்பட்டவர்களும் மீண்டும் ஐ. தே. கட்சிக்குள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார்கள். இதற்காகக் கட்சியின் தலைமைப் பீடம் தயாராகி விட்டது. இதன் வெளிப்பாடே ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவிற்கு கட்சியில் யாரையும் சேர்த்துக் கொள்வதற்கான அதிகாரத்தை கட்சியின் செயற்குழு வழங்கியமையாகும்.

இந்த வரிசையில் முதலில் எடுக்கப்பட்டதும், முக்கியம் பெறுவதும் காமினி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கையாகும். இதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிடக் கூடிய பலம்பெறும் என்பதோடு பிரேமதாசாவால் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உடைத்தெறியப்பட்ட உயர் குழாத்தின் அதிகார பலமானது மீண்டும் கட்சிக்குள்ளும், ஆட்சியிலும் நிலை நிறுத்தப்படும்.

இதனை ஐ. தே. கட்சியிலுள்ள அதாவது பிரேமதாசா அணியினர் எதிர்க்கக் கூடும். ஆனால் திருமதி பிரேமதாசா கூட ஐ. தே. கட்சியில் இருந்து ஓரம் கட்டப்பட்ட நிலையில் இது எந்தளவுக்கு சாத்தியமானது என்பது கேள்விக்குரியதே. ஏனெனில் இவ் உயர் குழாத்தினரிடமான ஆட்சி மாற்றமானது தனியாக தற்பொழுது கட்சியில் உள்ள

# இலங்கையில் பூதாகரமாகிவரும் போதைப் பொருள் பிரச்சினை

இன்று உலகமெங்கும் போதைப் பொருளுக்கு அடிமையாதலும், அதனால் ஏற்படுகின்ற பல பரிமாணங்களிலான சமூகப் பாதிப்புக்களும் மிக அபாயகரமான கட்டத்தை அடைந்துள்ளன.

இலங்கையில் இது பூதாகரமாக வளர்ந்து வரும் ஒரு பிரச்சினையாகவும் உடனடியாக அனைவரது கவனத்திற்கும் உட்படவேண்டிய ஒரு முக்கியத்துவம் மிக்க விடயமாகவும் கருதப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. போதைக்கு அடிமையாதல் என்ற துர்நடத்தை ஏற்பட்டவுடன் அதற்காக வருந்துவதைவிட, அது ஏற்படுவதற்கு முன் தடுத்தல் இப்பிரச்சினையிலிருந்து விடுபட ஒரு சிறந்த வழி முறையாகும். இவ்வாறு அண்மையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் இலங்கைப் போதைப் பொருள் எதிர்ப்புச்சங்க (ஸ்லானா) இணைப் பணிப்பாளர் தர்சினி கினியாங்கொட தெரிவித்தார்.

இலங்கையில் அண்மைக் காலத்தில் அதிகரித்து வரும் போதைப் பொருள் பாவனை மற்றும் அது தொடர்பான குற்றச் செயல்கள் தொடர்பில் 'ஸ்லானா' இயக்கம் காத்திரமான பங்களிப்புச் செய்து வருகிறது. போதைப் பொருள் பாவனையால் ஏற்படக்கூடிய பாரதூரமான விளைவுகளை புரியும்படி எடுத்துச்சொல்வதுமூலமும் மற்றும் பல்வேறு செயல் நடவடிக்கைகள்மூலமும் ஆரம்பத்திலேயே போதைப் பழக்கத்திற்கு அடிமையாவோரை கணிசமான அளவு குறைக்க முடியுமென மேற்படி செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது; 'ஸ்லானா' இயக்கம் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாவோர் தொடர்பிலான பல்வேறு ஆய்வுகளை ஏற்கனவே மேற்கொண்டுள்ளது. இவ் வாய்வுகள் மூலம் பல அதிர்ச்சியான தகவல்கள் தெரியவந்துள்ளன. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்படி போதைப் பொருளுக்கு அடிமையாவோரில் மிகஅதிகமானவர்கள் 16-20 வயதமைப்புக் குட்பட்டவர்களே உள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. எனவே இத்தகையவர்களின் பெற்றோர், சகோதர சகோதரியர், உடன் நண்பர்கள், ஆசிரியர்கள் போன்றோருக்கே அதிகம் உண்டு. எனவே இவர்களுக்கு மத்தியில் இது தொடர்பான உணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

அண்மைக் காலத்தில் மிக அதிகமான அளவு போதைப் பொருள் கடத்தல் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் போதைப்பொருள் தடுப்புபணியக பணிப்பாளர் சி எல் ரட்ணாயக்க தெரிவித்தார். இதனைத் தடுப்பதற்கு சட்டமும் தண்டனையும் இருந்த போதும் அவை பல சந்தர்ப்பங்களில் பிரயோசனம் அற்றவையாகவே உள்ளன.

அநேகமான பொழுதுகளில் மிகவும் அரசியல் செல்வாக்கு மிக்க போதைப்பொருள் குற்றவாளிகள் சட்டத்திலிருந்து தப்பிக் கொள்கின்றனர். சட்டத்தினால் இதனைத்தடுப்பதற்கு முயலுவதனைக் காட்டிலும் இத்தகைய தடுப்பு நடவடிக்கைகள் மேலும் பயனுடையதாக இருக்குமென தான் கருதுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

சமீபத்தில் பல மில்லியன் ரூபாய் பெறுமதியான ஹெரோயின் கடத்தல்களை போதைப்பொருள் தடுப்புப் பொலிஸ் முறியடித்துள்ளது. மிகவும் பயனுள்ள புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவை எமது சமூகம் மிகஆபத்தான சவால் ஒன்றை எதிர்நோக்குவதனையே காட்டுகின்றது. ஆய்வுகளின்படி 10 சதவீதமான கடத்தல்களே பொதுவாக கண்டு பிடிக்கப்படுகின்றன எனத் தெரியவந்துள்ளது. இதன்படி கண்டு பிடிக்கப்படாமல் இருப்பது 90 சத வீதமாகும்.

அதிகாரிகளின் மதிப்பீட்டின்படி 50 ஆயிரம் போதைப் பொருள் பாவனையாளர்கள் தற்போது நாட்டில் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இது தொடர்பாக தகவல்கள் சேகரிப்பதில் உள்ள தடயங்களை கருத்திற் கொண்டு யோசிக்கும்போது இது மேலும் பன்மடங்காக இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன

பொதுவாக நாட்டில் இளைஞர் சனத்தொகையே இதற்குப் பலியாவதால் நாட்டின் எதிர்காலம் கேள்விக்குரியாகி

தவிர போதைப்பொருள் பாவனை தடுப்பு நடவடிக்கைகள் பராமரிப்பு தடுப்புக்காவல் நிலையங்கள், சீர்திருத்தப் பள்ளி போன்றவற்றிற்கும் பெருந்தொகைப் பணத்தை செலவிட வேண்டியுள்ளது என அவர் கூறினார்.

வளர்ந்து வரும்உலகளாவிய போதைப் பொருள் பாவனை அபாயம் கருதி ஐ நா. ஜூன் 26ஆம் திகதியை சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்புத் தினமாகப் பிரகடனப்படுத்தி இருந்ததுடன் ஏற்கனவே ஐ நா. தாபனத்தின் பொதுச் சபையால் 1991-2000 வரையுள்ள 10 ஆண்டுகள் போதைப்பொருள் எதிர்ப்பு தசாப்தமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் அரசாங்கமும், ஐ நா. நிறுவனமும் மற்றும் அமைப்புக்களாலும் மாத்திரம் இதனை தடுத்து விடுதல் சாத்தியமானதன்று என்பது உணரப்பட்டுள்ளது.

எனவே தனிமனிதர்கள், குடும்பங்கள், சமூகங்கள், நிறுவனங்கள், அமைப்புக்கள் ஆகிய பல்வேறு மட்டங்களில் இப்பிரச்சினை அணுகப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை போதைப்பொருள் தடுப்பு இயக்கம் (ஸ்லானா) பல்வேறு அணுகுமுறைகள் வாயிலாக தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இது தொடர்பாக கருத்தரங்குகள், கண்காட்சிகள் நடத்துதல், சுவரொட்டிப் போட்டி மற்றும் சமூக அபிவிருத்தி வாயிலாக மக்கள் மத்தியில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுதல், ஆய்வுகள், மதிப்பீடுகள் மேற்கொள்ளுதல் போன்ற செயல் நடவடிக்கைகளில் கடந்த பல ஆண்டுகளாக ஈடுபடுகின்றது. இந்தப் பிரச்சினையின் பல்வேறு பரிணாமங்களையும் உணராதவரையில் சமூகத்தை இதிலிருந்து விடுவிப்பது சிரமமானதாகும் என 'ஸ்லானா' பிரசுரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது வளரும் பருவத்தில் குறிப்பாக அவர்கள் மனதில் பதியும் அவர்களது பொறுப்புகள் அவர்களுக்கு உணர்த்தப்பட வேண்டும்.

போதைப்பொருள்பாவனை மனிதனின் மனோவியல் மற்றும் நடத்தையுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்

## இந்திய விமானப் படைக்கு 'ஹேவாக்ஸ்' விமானங்கள்?

(டில்லி)

இந்திய விமானப் படை ரேடார் விமானமான ஹேவாக்ஸ் விமானங்களை கொள்வனவு செய்ய திட்டமிட்டுள்ளதாக இந்திய தினசரியான ஹெரால்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

வானில் பறந்தவாறே விமான அணிகளை தனது ரேடார் கண்காணிப்பு மூலம் நெறிப்படுத்தும் பறக்கும் ரேடாராக விளங்கும் இந்த ஹேவாக்ஸ் விமானங்கள் முழுமையாக இலத்திரனியல் மயமானது என்பது குறிப்பிடத்தக்கது. வளைகுடாப் போரின்போது அமெரிக்க விமானப்படை யுத்தவிமானங்களின் பாதைகளை நெறிப்படுத்துவதில் இந்தரக விமானங்களை பயன்படுத்தியது.

## பாரதீய ஜனதா விரைவில் ஆட்சி அதிகாரத்தைப் பெறும்?

விரைவில் பொதுத் தேர்தல் நடத்தப்படுமென்றும், அப்போது பல பிரச்சினைகளுக்குள் சிக்கியுள்ள இந்திரா காங்கிரஸ் கட்சியிடமிருந்து பாரதீய ஜனதா அதிகாரத்தைக் கைப்பற்றும் என்றும் பாரதீய ஜனதாக் கட்சியின் பொதுக் செயலாளர்வெங்கையா நாயுடு கூறியுள்ளார்.

கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில்;

ஒருநிழல் அமைச்சரவையை உருவாக்குவதற்கும், இந்திரா காங்கிரசுக்கு எதிரான ஊழல் குற்றச் சாட்டுக்களை வலியுறுத்தி பிரசாரம் செய்யவும் முடிவு செய்ய வேண்டுமென வலியுறுத்தினார்.

அத்துடன் தேர்தல் எந்த நேரத்திலும் நடத்தப்படலாம் என்ற நோக்கத்துடன் தான் செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## நம்பிக்கையில்லா பிரேரணை பாதிப்பு எதையும் தராது

- வி. என். காட்கில்

(டில்லி)

தேசிய முன்னணியும் இடதுசாரிக் கூட்டணியும் இணைந்து கொண்டுவர உத்தேசித்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தால் காங்கிரஸ் அரசுக்கு ஆபத்து எதுவுமில்லை என்று கட்சிப் பேச்சாளர் வி. எல். காட்கில் கூறியுள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் செய்தியாளரிடம் பேசிய வி. என். காட்கிலிடம் அ. இ. அ. தி. மு. கவின் உதவி நாடப்படுமா என்று கேட்கப்பட்ட போது அரசியலில் எதுவும் நடக்கலாம் என்று பதில் அளித்தார்.

## கட்சிகளை கையாள்வதில் வெவ்வேறு அணுகுமுறைகள்

-வாழப்பாடி குற்றச்சாட்டு

(சென்னை)

சென்னையில் தி மு க நடாத்திய சாலை மறியல்போராட்டத்தையும், காங்கிரஸ் கட்சியினர் நடாத்திய கடைஅடைப்பு போராட்டத்தையும் கையாள்வதில் ஆளுங்கட்சி இரட்டை நிலையை கடைப்பிடித்ததாக தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி குற்றம் சாட்டியுள்ளார்.

தி. மு. கவின் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டர்கள் கைது செய்யப்பட்டு அன்றைய தினமே விடுவிக்கப்பட்டதாகவும், ஆனால் காங்கிரஸ் கட்சி நடாத்திய கடைஅடைப்பு போராட்டத்தில் கைது செய்யப்பட்ட தொண்டர்கள் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில்

## 29 பாராளுமன்ற உறுப்பினர் பதவி இழக்கக் கூடும்

[இஸ்லாமாபாத்]

பாகிஸ்தானின் இருபத்தொன்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி இழக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தானின் அதிபர் குலாம்

இருபத்தொன்பது பேருமே பதவி இழக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஏப்ரல் 18 இல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டபின்னர் இடைக்கால அரசில் பணியாற்றியமை காரண

கட்சியில் யாரையும் சேர்த்துக் கொள்வதற்கான அதிகாரத்தை கட்சியின் செயற்குழு வழங்கியமையாகும்.

இந்த வரிசையில் முதலில் எடுக்கப்பட்டதும், முக்கியம் பெறுவதும் காமினி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கையாகும். இதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிடக் கூடிய பலம்பெறும் என்பதோடு பிரேமதாசாவால் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உடைத்தெறியப்பட்ட உயர் குழாத்தின் அதிகார பலமானது மீண்டும் கட்சிக்குள்ளும், ஆட்சியிலும் நிலை நிறுத்தப்படும்.

இதனை ஐ. தே. கட்சியிலுள்ள அதாவது பிரேமதாசா அணியினர் எதிர்க்கக் கூடும். ஆனால் திருமதி பிரேமதாசா கூட ஐ. தே. கட்சியில் இருந்து ஓரம் கட்டப்பட்ட நிலையில் இது எந்தளவுக்கு சாத்தியமானது என்பது கேள்விக்குரியதே. ஏனெனில் இவ் உயர் குழாத்தினரிடமான ஆட்சி மாற்றமானது தனியாக தற்பொழுது கட்சியில் உள்ள அதிகாரம் பொருந்தியவர்களினால் மட்டு மல்ல, கட்சிக்கு வெளியில் நின்று கட்சியை ஆட்டிவைக்கக் கூடிய பலம் பொருந்தியவர்களின் பின்னணியும் உண்டு என்றே கருதப்படுகின்றது.

ஜனநாயக தேசிய முன்னணியின் இணைப்பிற்கு அடுத்த அம்சமாகவுள்ளது, முன்னாள் நிதி அமைச்சர் டிமெலின் வருகையாகும். ஐ. தே. கவில் இணைந்து கொள்ள டிமெல் முன்னரே முயற்சித்தாராயினும் திரு. பிரேமதாசா அதற்கு அங்கிகாரம் வழங்கவில்லை. இதனால் கடந்த வருட இறுதியில் லண்டனில் இருந்து வந்தவர் அங்கேயே திரும்ப வேண்டி இருந்தது ஆனால், இன்று இந்நிலை மாற்றம் கண்டுள்ளது. இதனை வெளிப்படுத்துமாப் போல் பிரேமதாசா காலத்தில் அவர் மீது அவதூறுகளை வாரி இறைத்த ஏரிக்கரைப் பத்திரிகைகள் டிமெல்லிடமும், அவரது குடும்பத்தினரிடமும் பகிரங்க மன்னிப்புக் கோரியுள்ளது. இந்நிலையில் டிமெல் நாடுதிரும்புவாரானால், அவர் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவார் என்பதில் சந்தேகப்பட ஏதுமில்லை.

இவை ஒரு புறமாக ஐக்கிய தேசிய கட்சி சீரமைப்பு வேலைகள் இடம்பெறும் வேளையில், கட்சி மீதான களங்கத்தை களையும் வேலையாக முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொலவுடன் கட்சி சமரம் செய்து கொண்டுள்ளது. இதன்மூலம் உடுகம்பொலவை நீதிமன்றத்தில் இரு து விடுவித்ததிற்கு பிரதியுபகாரமாக அவரும் அரசு மீதான தனது குற்றச்சாட்டுகளை வாபஸ் பெற்றுக் கொண்டுள்ளார். இதன் மூலம் கட்சி தனதுகளங்கத்தைக் கழுவிக் கொண்டது. இது பரஸ்பரம் இரு கொலைகளுக்கிடையில் காட்டிக் கொடுப்பதில்லை என்ற ரீதியில் ஏற்பட்ட உடன்பாட்டைப் போன்றதாகும்.

இவ்வாறாக ஐ. தே. கட்சி மேற்கொண்டு வரும் சீரமைப்பும், அவதூறுகளும் நடவடிக்கையும் சிறிலங்கா அரசியலைப் பொறுத்து மிகவும் முக்கியமானதாகும். இச்சீரமைப்பானது ஐ. தே. கவிற்குள் மீண்டும் உயர் குழாத்தின் அதிகாரத்தை நிறுவுவதோடு மட்டுமல்ல, சிறிலங்கா ஆட்சி அதிகாரத்தை மீண்டும் அவர்கள் கைப்பற்றிக் கொள்ளும் நோக்கில் மேற்கொள்ளப்படுவதாகும்.

கள்மூலமும் ஆரம்பத்திலேயே போதைப் பழக்கத்திற்கு அடிமையாவோரை கணிசமான அளவு குறைக்க முடியுமென மேற்படி செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது; 'ஸ்லானா' இயக்கம் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாவோர் தொடர்பிலான பல்வேறு ஆய்வுகளை ஏற்கனவே மேற்கொண்டுள்ளது. இவ்வாய்வுகள் மூலம் பல அதிர்ச்சியான தகவல்கள் தெரியவந்துள்ளன. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் படி போதைப் பொருளுக்கு அடிமையாவோரில் மிகஅதிகமானவர்கள் 16-20 வயதமைப்புக் குட்பட்டவர்களே உள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. எனவே இத்தகையவர்களின் மனநிலைப் போக்குகள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், நடத்தைகள் போன்றன ஆராயப்பட்டு அதற்கேற்றாற்போல் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டியதன் அவசியம் உள்ளது.

போதைப் பொருள் பாவனையிலிருந்து தடுக்கக்கூடிய விதத்தில் தனிமனிதனில் பாதிப்பு ஏற்படுத்தும் சக்தி பெற்டுகின்றது. ஆய்வுகளின்படி 10 சதவீதமான கடத்தல்களே பொதுவாக கண்டு பிடிக்கப்படுகின்றன எனத் தெரியவந்துள்ளது. இதன்படி கண்டு பிடிக்கப்படாமல் இருப்பது 90 சத வீதமாகும்.

அதிகாரிகளின் மதிப்பீட்டின் படி 50 ஆயிரம் போதைப் பொருள் பாவனையாளர்கள் தற்போது நாட்டில் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இது தொடர்பாக தகவல்கள் சேகரிப்பதில் உள்ள தடயங்களை கருத்திற் கொண்டு யோசிக்கும்போது இது மேலும் பன்மடங்காக இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன

பொதுவாக நாட்டில் இளைஞர் சனத்தொகையே இதற்குப் பலியாவதால் நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. இதனால் நாட்டின் சமூகவியல் தன்மைகள், மக்களின் உணர்வுகள், மனோநிலை, உடல் என்பன அளவு கடந்த விதத்தில் பாதிக்கப்படுகின்றன.

போதைப்பொருள் பாவனையால் வருடாந்தம் 250 கோடி ரூபாவுக்கு மேல் நாட்டுக்கு இழப்பு ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதைத் சமூக அபிவிருத்தி வாயிலாக மக்கள் மத்தியில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுதல், ஆய்வுகள், மதிப்பீடுகள் மேற்கொள்ளுதல் போன்ற செயல் நடவடிக்கைகளில் கடந்த பல ஆண்டுகளாக ஈடுபடுகின்றது. இந்தப் பிரச்சினையின் பல்வேறு பரிணாமங்களையும் உணராதவரையில் சமூகத்தை இதிலிருந்து விடுவிப்பது சிரமமானதாகும் என 'ஸ்லானா' பிரசுரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது வளரும் பருவத்தில் குறிப்பாக அவர்கள் மனதில் பதியும் அவர்களது பொறுப்புகள் அவர்களுக்கு உணர்த்தப்பட வேண்டும்.

போதைப்பொருள்பாவனை மனிதனின் மனோவியல் மற்றும் நடத்தையுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இது உயிரியலுடன் சம்பந்தப்படுத்தி நோக்கப்பட வேண்டும். சமூகக் காரணிகள் போதைப்பொருள் பாவனைக்குத் தூண்டுகோலாக அமையும். அதேசமயம் உயிரியல் காரணிகள் அதில் அவனை தங்கியிருக்கச் செய்கின்றன.

-சடகோபன்

சென்னையில் திமுக நடாத்திய சாலை மறியல்போராட்டத்தையும், காங்கிரஸ் கட்சியினர் நடாத்திய கடை அடைப்பு போராட்டத்தையும் கையாள்வதில் ஆளுங்கட்சி இரட்டை நிலையை கடைப்பிடித்ததாக தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி குற்றம் சாட்டியுள்ளார்.

போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டர்கள் கைது செய்யப்பட்டு அன்றைய தினமே விடுவிக்கப்பட்டதாகவும், ஆனால் காங்கிரஸ் கட்சி நடாத்திய கடை அடைப்பு போராட்டத்தில் கைது செய்யப்பட்ட தொண்டர்கள் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில்

## 29 பாராளுமன்ற உறுப்பினர் பதவி இழக்கக் கூடும்

[இஸ்லாமாபாத்]

பாகிஸ்தானின் இருபத்தொன்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி இழக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தானின் அதிபர் குலாம் இஷாக்கான் நியமித்த இடைக்கால அரசின் பிரதமர் பக்ஷெயம் மஸாரி உட்பட அவரது அரசில் பதவி வகித்த இருபத்தொன்பது பேருமே பதவி இழக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஏப்ரல் 18 இல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டபின்னர் இடைக்கால அரசில் பணியாற்றியமை காரணமாகக் கொண்டு இவர்கள் மீது குற்றம் சுமத்தி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஐ.நா. சிரேஷ்ட அதிகாரி மீண்டும் பக்தாத் விஜயம்

(ஐ. நா)

ஐ.நா. பாதுகாப்பு சபை சிரேஷ்ட அதிகாரி ஒருவரை நேற்று மீண்டும் ஈராக் தலைநகர் பக்தாத்திற்கு அனுப்பியுள்ளது. ஈராக்குடன் பெரும் அழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை அழிக்கும் ஒப்பந்தம் தொடர்பாக ஏற்பட்டிருக்கும் இழுபறி நிலையைப் போக்கி புதிய பேச்சுக்களைத் தொடங்குவதே இவரது விஜயத்தின் நோக்கம் என்று சொல்லப்படுகின்றது. நீண்ட கால அடிப்படையில் ஈராக்கின் ஆயுதவசதிகளைக் கண்காணிப்பதும் இப் பேச்சுக்களின் போது ஆராயப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## சந்தை விலை விபரம் (12-07-1993)

### யாழ். மாவட்ட சராசரி சில்லறை விலைகள்

| தொ. இல. | பொருள்கள் | அலகு | திருநெல்வேலி | பெரிய கடை | சுன்னாகம் | அச்சுவேலி | சங்கானை | நெல்லியடி | பருத்தித்துறை | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 01. | குத்தரிசி | கி.கி | 30.50 | 30.00 | 28.50 | 27.30 | 29.60 | 29.50 | 29.00 | 31.00 |
| 02. | கோதுமை மா | '' | 14.00 | 13.15 | 14.00 | 14.15 | 13.00 | 16.00 | 13.30 | 13.30 |
| 03. | சீனி | '' | 36.50 | 38.15 | 35.65 | 37.50 | 38.00 | 38.00 | 40.65 | 40.00 |
| 04. | கத்தரி | '' | 16.65 | 24.30 | 19.30 | 20.65 | 18.00 | 16.65 | 23.30 | 15.65 |
| 05. | வெண்டி | '' | 21.00 | 42.00 | 22.00 | 24.65 | 20.00 | 27.00 | 38.65 | 40.00 |
| 06. | பாகல் | '' | 20.00 | 23.00 | 21.65 | 43.30 | 30.65 | 29.30 | 39.30 | 29.65 |
| 07. | புடோல் | '' | 9.65 | 18.00 | 8.65 | 20.00 | 15.50 | 14.65 | 18.65 | 19.30 |
| 08. | பயற்றங்காய் | '' | 23.65 | 38.30 | 20.65 | 32.65 | 32.00 | 25.00 | 26.00 | 20.65 |
| 09. | தக்காளி | '' | — | — | — | 80.00 | 80.00 | — | — | — |
| 10. | வாழைக்காய் | '' | 37.00 | 43.65 | 31.65 | 48.00 | 38.30 | 40.00 | 39.30 | 43.30 |
| 11. | பீற்றூட் | '' | 29.00 | 37.00 | 22.30 | 40.00 | 16.50 | — | 35.30 | — |
| 12. | தேங்காய் | ஒன்று | 12.15 | 14.15 | 13.30 | 13.80 | 15.00 | 13.80 | 13.30 | 09.00 |
| 13. | பச்சைமிளகாய் | கி.கி | 47.65 | 58.00 | 45.00 | 93.30 | 55.00 | 50.00 | 53.30 | 40.00 |
| 14. | எலுமிச்சை | '' | 105.30 | 106.65 | 100.00 | 106.65 | 105.00 | 75.00 | 86.65 | 98.30 |
| 15. | வெங்காயம் | '' | 15.65 | 15.65 | 11.30 | 16.30 | 10.80 | 16.00 | 19.65 | 14.65 |
| 16. | கப்பல் வாழைப்பழம் | '' | 37.50 | 35.30 | 40.00 | 39.00 | 40.00 | 50.00 | 37.50 | — |
| 17. | இறால் | '' | 100.00 | 127.50 | 106.65 | 93.30 | 100.00 | 100.0 | 110.00 | 61.65 |
| 18. | பெரிய மீன் | '' | 200.00 | 170.00 | 200.00 | 190.00 | 130.00 | 210.00 | 150.00 | 90.00 |
| 19. | சிறிய மீன் | '' | — | 80.00 | 60.00 | 70.00 | 100.00 | 75.00 | 45.00 | 50.00 |
| 20. | முட்டை | ஒன்று | 08.25 | 07.90 | 07.50 | 08.65 | 08.00 | 08.50 | 08.30 | 06.30 |

தகவல்:- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

## மீண்டும் விமானத் தாக்குதல்

(மொகாடிஸ்யூ)

சோமாலியாவில் ஐ.நா. படை விமானங்கள் நேற்று முன்தினம் மீண்டும் தாக்குதல்களை நடாத்தியுள்ளன.

மொகமட் பரா அயிடீட் தலைமையிலான கிளர்ச்சிக் குழுவின் தலைமையகம் மீது தாக்குதல் நடாத்தப்பட்டதாக கூறப்படுகின்றது

இதேவேளை சோமாலியாவில் நிலை கொண்டிருக்கும் ஐ நா. படையில் இடம்பெற்றுள்ள இத்தாலிய துருப்புக்களின் தளபதி போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டு பேச்சுவார்த்தை தொடங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடந்த விமானத் தாக்குதலில் 90 சோமாலியர்களும், இரண்டு வெளிநாட்டு பத்திரிகையாளர்களும் கொல்லப்பட்டதாக ஜெனரல் அய்டீட்டின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஈழநாதம்

# ஜே.வி.பி. புத்துயிர் பெற்றது தாக்குதலுக்கும் தயார்

## கொழும்புப் பத்திரிகை தகவல்

(கொழும்பு)

தற்போது வெளிநாட்டில் தங்கியிருக்கும் சோமவன்ச அமரசிங்க தலைமையில் புத்துயிர் பெற்றுள்ள ஜே.வி.பியினர் மீண்டும் பாரிய தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடும் சாத்தியம் அதிகரித்து வருவதாக கொழும்பிலிருந்து வெளிவரும் ''திவுலே'' என்னும் சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

புத்துயிர் பெற்றுள்ள ஜே.வி.பியினர் இம்முறை கெரில்லா பாணி தாக்குதலில் ஈடுபடுவர் எனவும் அச்செய்தியில் தெரிவிக்கப்படுகிறது. இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு ஜே.வி.பி. தலைமைப்பீடம் தனது உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளது.

விஜயவீர இறந்தபோதிலும் அவரின் வாரிசுகள் தற்போது பெருமளவு அதிகரித்துள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களுக்கு தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது வெளிநாட்டில் தங்கியிருப்பதாக கருதப்படும் சோமவன்ச அமரசிங்க விரைவில் சிறிலங்கா திரும்புவார் எனவும் இம்முறை அவர்களின் போராட்டம் கடந்த காலங்களை விட கடுமையாக இருக்கும் எனவும் ''திவுலே'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

## மீண்டும் 'றுகுணு' கப்பல் வடக்கு நோக்கி வரும்

(யாழ்ப்பாணம்)

''றுகுணு'' என்ற கப்பல் மீண்டும் வடக்கு நோக்கிய பயணத்தை ஆரம்பிக்க உள்ளது.

இக்கப்பல் தற்பொழுது கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கிறது. இக்கப்பலில் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருவதற்கான ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள் ஏற்றப்பட்டு வருகிறது நேற்றுக் காலை முதல் இக்கப்பலில் மேற்படி பொருளை ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக கொழும்பில் இருந்து நேற்று நண்பகல் எமக்கு கிடைத்த விசேட தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

தடைசெய்யப்பட்ட ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்களுடன் கடந்த மாதம் வடக்கு நோக்கி வந்த இக்கப்பல் பருத்தித்துறைக் கடல்பரப்பில் நடைபெற்ற ''நடுக்கடல் நாடகத்தை'' தொடர்ந்து பொருள்கள் அனைத்தையும் காங்கேசன் களஞ்சியத்தில் இறக்கிவிட்டு கொழும்பு துறைமுகத்துக்குச் சென்றது குறிப்பிடத்தக்கது

இம்முறை யாழ்ப்பாணத்துக்காக ஒரு தொகுதி மண்ணெண்ணெய் பீப்பாக்களே இக்கப்பலில் ஏற்றப்பட்டு வருவதாக நேற்று நள்ளிரவு கிடைத்த மற்றுமொரு தகவல் தெரிவிக்கின்றபோதிலும், எத்தனை பீப்பா மண்ணெண்ணெய் எடுத்துவரப்படும் என்பதை தெரிந்து கொள்ள முடியவில்லை. இக்கப்பல் அடுத்தவாரம் முற்பகுதியில் பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்தடைந்துவிடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க),(நி),(சி)

## ஓய்வூதிய கொடுப்பனவில் முரண்பாடுகள் ஆராயகுழு

(கொழும்பு)

ஓய்வூதியக் கொடுப்பனவில் உள்ள முரண்பாடுகள் குறித்து ஆராய்ந்து சிபார்சுகளை செய்ய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் ஓய்வூதிய திணைக்களம், திறைசேரி, பொதுநிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சு, செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் அதிகாரிகளும் ஓய்வூதியம் பெறுவோர் சங்க பிரதிநிதிகளும் இடம் பெறுகின்றனர்.

ஓய்வூதியக் கொடுப்பனவு கணிப்பில் ஏதும் முரண்பாடுகள் நிலவுகின்றதா? ஓய்வூதியர்களுக்கு சில சலுகைகளை வழங்கும்போது குறைபாடுகள் நிகழ்கின்றதா? என்பது பற்றி இக்குழு ஆராய்கிறது. இது சம்பந்தமான சிபார்சுகள் அடங்கிய அறிக்கை நான்கு மாதங்களினுள் சமர்ப்பிக்கப்படும்.

ஓய்வூதியக் கொடுப்பனவில் பல்வேறு முரண்பாடுகள் காரணமாக மூன்று லட்சத்திற்கும் அதிகமான ஓய்வூதியர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## நாகர் கோயில் வடக்கில் சிசுவின் சடலம் மீட்பு

(வடமராட்சி)

நாகர் கோயில் வடக்கில் ஒரு நாள் சிசு ஒன்றின் சடலம் கண்டெடுக்கப்பட்டு மேல் விசாரணைக்காக பருத்தித்

அவ்வூர் மக்களால் கண்டெடுக்கப்பட்ட இச்சிசு நாகர் கோயில் காவல்துறையினரின் கவனத்திற்கு கொண்டு சென்றதையடுத்து காவல்துறை

## வீரவணக்க கூட்டம்

இதுவரை ஏழாம் மாதங்களில் வீரச்சாவெய்திய மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களுக்குட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் யாழ்ப்பாணம் நீகன் நகர் மாவீரர் மண்டப முன்றலில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கு நடைபெறும்.

இதில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களின் நினைவுப் பேருரையும் அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

### உலர் உணவு அட்டை விநியோகம்

தற்போது அழலில் உள்ள உலர் உணவு அட்டைக்குப் பதிலாக புதிய உலர் உணவு அட்டை நாளை றெக்கிளமேசன் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட ப.நோ.கூ. சங்கக்கிளை இல 32 'ஏ' யைச் சேர்ந்த மக்களுக்கு வழங்கப்பட உள்ளதாக றெக்கிளமேசன் கிழக்கு கிராம சேவையாளர் தெரியப்படுத்தி உள்ளார்.

இத் தினத்தில் இப்பகுதியில் வாழும் இடம் பெயர்ந்த மக்களுக்கும் உலர்உணவு அட்டை விநியோகிக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (17)

## திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம் தனது சகல நிவாரணக் கிளைகளையும் வரும் ஞாயிற்றுக்கிழமை திறந்து நிவாரண விநியோகத்தை மேற்கொள்ள உள்ளது.

இந்நிவாரணம் ஜூன்மாதத்திற்குரியதெனவும், அன்று ஞாயிற்றுக்கிழமையாக இருக்கின்ற போதிலும் சகல நிவாரக்கிளைகளும் முழுநேரம் திறந்து பாவனையாளர்களுக்கு நிவாரண விநியோகத்தை மேற்கொள்ள உள்ளதாக அதன் பொதுமுகாமையாளர் தெரிவித்தார். (சி)

### சமுகமளிக்கவும்

யாழ்.இந்துக்கல்லூரிநிலையத்தில் பயிற்சிபெறும் தொலைக் கல்வி ஆசிரியர்களுக்கான (பயிலுனர் அல்லாத) ஆசிரியர்களுக்கான இறுதிப் பரீட்சை விண்ணப்பம் அனுப்புவதற்கு பயிற்சி பெறும் சகல ஆசிரியர்களையும் வரும் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு சமுகமளிக்கும்படி சிரேஷ்ட போதனாசிரியர் திரு ச. சரவணமுத்து வேண்டிக்கொள்கிறார்.

## அடையாளம் காணாத

# ஜப்பான் தீவில் புவியதிர்ச்சி; நகர்ஒன்று முற்றாக அழிவு

## 72 பேர்பலி; 169பேரை காணவில்லை

(ரோக்கியோ)

ஜப்பானின் வடபகுதியிலுள்ள ஒரு தீவில் ஏற்பட்ட பயங்கர நிலஅதிர்ச்சியில் 72 பேர் பலியாகினர் 169பேர். காணாமற் போயுள்ளனர்.

கடந்த 25ஆண்டுகளில் ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கங்களில் இதுவே கடுமையானது. ரிஜ்டர் அளவு கோலில் நில அதிர்வின் அளவு 7.8 என பதிவாகியது.

இத் தீவுப் பகுதியில் உள்ள ஒரு நகர் முற்றாக நாசமாகிவிட்டது. இங்கிருந்த 600வீடுகளில் 300 வீடுகள் எரிந்துவிட்டன. இருமாடி ஹோட்டல் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 30பேர் பலியாகினர். இந்நில அதிர்ச்சியினால் கடலும் கொந்தளிப்பான நிலையில் காணப்படுகிறது.

1923 செப்டம்பர் முதலாம் திகதி ரிஜ்டர் அளவில் 7.9 என்ற அளவில் ரோக்கியோ நகரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் ஒருலட்சம்பேர் பலியானதும் 5லட்சம் வீடுகள் நாசமானதும் தெரிந்ததே.

## விஜேயை கொலை செய்ய 20 இலட்சம் பணம்

(கொழும்பு)

சிறிலங்கா மக்கள் கட்சியின் முன்னாள் தலைவர் விஜே குமாரணதுங்காவைக் கொலை செய்வதறகு இருபது லட்சம் ரூபா ஒப்பந்தம் ஒன்றுசெய்யப்பட்டதாக தற்போது செய்தி வெளியாகியுள்ளது.

சிறிலங்கா அரசியலில் இவரது மிகவேகமான பிரவேசமே இவர் கொலை செய்யப்படுவதற்குக் காரணமாக அமைந்ததாகவும் தெரியவந்துள்ளது. இவர் அரசியலில் நீண்டகாலம் ஈடுபடின் பழைய அரசியலில் தம்மை பெரிய கட்சிகள் எனக் கூறிக்கொள்ளும் முக்கிய கட்சிகள் தூக்கிஎறியப்பட்டிருக்கும்.

இதனால் அச்சமடைந்த முக்கிய கட்சியினரே தமது கட்சிக்கு ஆபத்துவரும் எனக்கருதிய இக்கொலையைப் புரிந்ததாகவும், இதற்காக கொலையாளிக்கு 20லட்சம் ஒப்பந்தம் செய்யப்பட்டதாகவும் ''திவுலே'' எனும் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## மாவட்ட மட்டத்திலான வலைபந்தாட்ட போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையான மாவட்டநிலை வலைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளில் இன்று மாலை 3 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் போட்டிகளில் 17வயதுப்பிரிவில் சாவகச்சேரி றிபேக் கல்லூரியை எதிர்த்து யூனியன் கல்லூரியும், வரணி ம.வி. எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரியும் விளையாடும்.

அச்சுவேலி புனித திரேசா கல்லூரியில் மாலை 3மணிக்கு நடைபெறும் போட்டியில் 17வயதுப் பிரிவில் சண்டிலிப்பாய் ம.வி. எதிர்த்து வல்லை மகளிர் கல்லூரி விளையாடும்

## வகுப்பு

(கொழும்புத்துறை)

யாழ் மாநகரசபை சுகாதாரப் பகுதியினரால் செயல்முறைச் சத்துணவு வகுப்பு ஒன்று யாழ். சட்டநாதர் வீதி கொண்டலடி பாலர் பாடசாலையில் இன்று பி.ப. 2-30 மணிக்கு நடைபெறும்.

இச்செயல் முறைச் சத்துணவு வகுப்பில் பாலர் பாடசாலைச் சிறார்களின் பெற்றோர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வை யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதியினர் யுனிசெப் நிதி உதவியுடன் நடாத்தவுள்ளனர். (24)

## கலை நிகழ்ச்சிகள்

யாழ் பல்கலைக் கழகத்தில் தொழிலாளர் கற்கை நெறியைக் கற்கும் தொழிலாளர் கல்விக் கழகத்தினரின் ''துலங்கல்'' III சஞ்சிகை வெளியீட்டாளர்களுக்கான நிதியைச் சேகரிக்கும் நோக்குடன் தொழிலாளர் கல்விக் கழகத்தினர் 24-7-93 இல் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் பல விசேட கலை நிகழ்ச்சிகளை நடாத்த நடவடிக்கை எடுத்துள்ளார்கள். (17)

### யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் மகாபொலக் கொடுப்பனவு 6ஆம் தவணைப்பணம்

பல்கலைக்கழக மாணவர்களுக்கான 6ஆம் தவணை மகாபொலக் கொடுப்பனவுகளை 14-07-93 முதல் வழங்க பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் ஒழுங்குகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக்கொடுப்பனவுகள் பற்றிய முழு விபரங்களும், அறிவுறுத்தல்களும் பல்கலைக்கழக விளம்பரப்பலகைகளில் இடப்பட்டுள்ளன. இதற்கமைவாக கொடுப்பனவை உருத்துடைய

### தேசிய

ராயிலை என அவர் மேலும் தெரிவித்தார்.

பி.பி.ஸியின் சந்தேசிய வானொலிக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்; தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பாக தமது கட்சியுடன் உத்தியோக பூர்வமாக அல்லது உத்தியோகபூர்வமற்ற பேச்சுக்கள் எதுவும் நடைபெறவில்லை என்றும். அரசாங்கம் இன்று தனது ஆட்சியில் மிகவும் மோசமான நிலையில்

### காங்கேசன்

உயர்அதிகாரிகள் பங்குபற்றும் மற்றுமொரு உயர்மட்ட பேச்சுவார்த்தை மிகவிரைவில் நடாத்தப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

மேலும் இத்தொழிற்சாலையில் இருந்து ஏனைய தொழிற்சாலைகளுக்கு இடம் மாற்றப்பட்ட தொழிலாளர்களது நலன்கள் இதுவரை கவனிக்கப்படாமல் இருந்து வந்ததை

ஓய்வூதியக் கொடுப்பனவில் உள்ள முரண்பாடுகள் குறித்து ஆராய்ந்து சிபார்சுகளை செய்ய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் ஓய்வூதிய திணைக்களம், திறைசேரி, பொதுநிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சு, செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் அதிகாரிகளும் ஓய்வூதியம் பெறுவோர் சங்க பிரதிநிதிகளும் இடம் பெறுகின்றனர்.

ஓய்வூதியக் கொடுப்பனவு கணிப்பில் ஏதும் முரண்பாடுயர்களுக்கு சில சலுகைகளை வழங்கும்போது குறைபாடுகள் நிகழ்கின்றதா? என்பது பற்றி இக்குழு ஆராய்கிறது. இது சம்பந்தமான சிபார்சுகள் அடங்கிய அறிக்கை நான்கு மாதங்களினுள் சமர்ப்பிக்கப் படும்.

ஓய்வூதியக் கொடுப்பனவில் பல்வேறு முரண்பாடுகள் காரணமாக மூன்று லட்சத்திற்கும் அதிகமான ஓய்வூதியர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## நாகர் கோயில் வடக்கில் சிசுவின் சடலம் மீட்பு

(வடமராட்சி)

நாகர் கோயில் வடக்கில் ஒரு நாள் சிசு ஒன்றின் சடலம் கண்டெடுக்கப்பட்டு மேல் விசாரணைக்காக பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

அவ்வூர் மக்களால் கண்டெடுக்கப்பட்ட இச்சிசு நாகர் கோயில் காவல்துறையினரின் கவனத்திற்கு கொண்டு சென்றதை அடுத்து காவல்துறையினர் இச்சிசுவை வைத்திய சாலையில் ஒப்படைத்துள்ளனர். (யோ)


யாழ் நகர் ஸ்ரீதர் திரை யரங்கில்

NIGHT HAWKS

(இரவுப் பருந்துகள்)

(தமிழ் விளக்கம்)

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30 மணி,

மாலை 4.00 மணி, 6.00 மணி

(சி-6959)



பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான அபிவிருத்தி நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்

கூட்டம்

மேற்படி கூட்டம் பின்வரும் ஒழுங்கில், பின்வரும் இடங்களில் 17-7-93ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

1. வடமராட்சி, வடமராட்சி கிழக்கு
   பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி
2. தென்மராட்சி — சாவகச்சேரி நகர சபை.
3. வலிகாமம், நல்லூர், யாழ்ப்பாணம்.
   யாழ். இந்துக் கல்லூரி, குமாரசாமி மண்டபம்.

அங்கத்தவர்கள் சம்பந்தப்பட்ட கலந்துரையாடலில் தவறாது பங்குபற்றும் வண்ணம் கேட்டுக்கொள்கிறேன்.

சுந்தரம் டிவகலாலா
பி. உ. உ. ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி/7006)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


கடல்பரப்பில் நடைபெற்ற "நடுக்கடல் நாடகத்தை" தொடர்ந்து பொருள்கள் அனைத்தையும் காங்கேசன் களஞ்சியத்தில் இறக்கிவிட்டு கொழும்பு துறைமுகத்துக்குச் சென்றது குறிப்பிடத்தக்கது

இம்முறை யாழ்ப்பாணத்துக்காக ஒரு தொகுதி மண்ணெண்ணெய் பீப்பாக்களே இக்கப்பலில் ஏற்றப்பட்டு வருவதாக நேற்று நள்ளிரவு கிடைத்த மற்றுமொரு தகவல் தெரிவிக்கின்றபோதிலும், எத்தனை பீப்பா மண்ணெண்ணெய் எடுத்துவரப்படும் என்பதை தெரிந்து கொள்ள முடியவில்லை. இக்கப்பல் அடுத்தவாரம் முற்பகுதியில் பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்தடைந்துவிடும் என்றும் தெரிவிக்கப் படுகிறது. (க), (நி), (சி)

திறந்திருந்தனவும், அன்று ஞாயிற்றுக்கிழமையாக இருக்கின்ற போதிலும் சகல நிவாரக்கிளைகளும் முழுநேரம் திறந்து பாவனையாளர்களுக்கு நிவாரண விநியோகத்தை மேற்கொள்ள உள்ளதாக அதன் பொதுமுகாமையாளர் தெரிவித்தார். (சி)

### சமுகமளிக்கவும்

யாழ். இந்துக்கல்லூரிநிலையத்தில் பயிற்சிபெறும் தொலைக்கல்வி ஆசிரியர்களுக்கான (பயிலுனர் அல்லாத) ஆசிரியர்களுக்கான இறுதிப் பரீட்சை விண்ணப்பம் அனுப்புவதற்கு பயிற்சி பெறும் சகல ஆசிரியர்களையும் வரும் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு சமுகமளிக்கும்படி சிரேஷ்ட போதனாசிரியர் திரு ச. சரவணமுத்து வேண்டிக்கொள்கிறார்.

## அடையாளம் காணாத ஆணின் சடலம்

தற்கொலை செய்துகொண்ட நபர் ஒருவரின் சடலம் யாழ். போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

இச் சடலம் 54 வயதுடைய சூசைப்பிள்ளை நிக்கலஸ்என்ற தகவல் மட்டுமே இதுவரை தெரியவந்துள்ளது. மேற்படி இந்த நபர் இறப்பதற்கு முன்னர் கொடுத்த இரண்டு முகவரிகளும் தெரியவந்துள்ளது. சன்யோவான் கோவிலடி, யாழ்ப்பாணம் என்றும் என். மகேந்திரன் 5ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்றும் இந்த இரு முகவரிகளும் உள்ளன.

நடுத்தர உயரம், மெலிந்த தோற்றம், பொதுநிறம், அடர்த்தியான தலைமயிர் ஆகிய அடையாளங்களைக் கொண்டிருக்கும் இவர் நீலமும், பச்சையும் கலந்த நிறமுடைய பற்றிக் சாரமும், பிறவுண் நிறத்தில் வெண்ணிறக் கோடுகள் உள்ள சேட்டும் அணிந்திருந்தார்.

இந்த நபர் தொடர்பாக அறிந்தவர்கள் அல்லது இவரது உறவினர்கள் உடனடியாக சுன்னாகம் காவல் துறைப் பணிமனையுடன் தொடர்புகொள்ளும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

### சுங்கபிரவின்

மானித்துள்ளது.

இடம்பெயர்ந்த குடும்பங்கள் அவர்களிடமுள்ள உலர் உணவு முத்திரைகளின் உரித்துரிமை அடிக்கட்டைகளை சமர்ப்பித்து தங்களுக்குரிய உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி)

யூனியன் கல்லூரியும், வரணி ம.வி. எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரியும் விளையாடும்.

அச்சுவேலி புனித திரேசா கல்லூரியில் மாலை 3மணிக்கு நடைபெறும் போட்டியில் 17வயதுப் பிரிவில் சண்டிலிப்

### தேசிய

ராயிலலை என அவர் மேலும் தெரிவித்தார்.

பி பி. ஸி யின் சந்தேசிய வானொலிக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்; தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பாக தமது கட்சியுடன் உத்தியோக பூர்வமாக அல்லது உத்தியோகபூர்வமற்ற பேச்சுக்கள் எதுவும் நடைபெறவில்லை என்றும், அரசாங்கம் இன்று தனது ஆட்சியில் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாலும் அதனில் இருந்து மீளவே இன்று தேசிய அரசாங்கம் என்ற கதையை பரப்பி மக்களின் கவனத்தை திருப்ப அரசு முயல்கிறது என்றும் தெரிவித்தார்.

### வங்கி

குள் சிக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது இக்கிளை மானிப்பாய் இலங்கை வங்கி கட்டடத்தில் இயங்கிவருவது தெரிந்ததே. இதேவேளை இலங்கை வங்கி யாழ். கிளைக்கு எதுவித பணமும் கப்பலில் வரவில்லை என யாழ். மாவட்ட இலங்கை வங்கி முகாமையாளர் தெரிவித்தார். (சி) (யோ)

### எறிகணை

ஷெல் மற்றும் துப்பாக்கிப்பிரயோகத்தினை நாளாந்தம் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. [பா]

யாழ். சட்டநாதர் வீதி கொண்டலடி பாலர் பாடசாலையில் இன்று பி. ப. 2-30 மணிக்கு நடைபெறும்.

இச்செயல் முறைச் சத்துணவு வகுப்பில் பாலர் பாடசாலைச் சிறார்களின் பெற்றோர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வை யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதியினர் யுனிசெப் நிதி உதவியுடன் நடாத்தவுள்ளனர். (24)

### காங்கேசன்

உயர்அதிகாரிகள் பங்குபற்றும் மற்றுமொரு உயர்மட்ட பேச்சுவார்த்தை மிகவிரைவில் நடாத்தப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

மேலும் இத்தொழிற்சாலையில் இருந்து ஏனைய தொழிற்சாலைகளுக்கு இடம் மாற்றப்பட்ட தொழிலாளர்களது நலன்கள் இதுவரை கவனிக்கப்படாமல் இருந்து வந்ததை மேற்படி யூனியன் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து இவர்களின் நலன்களை கவனிப்பது குறித்து கொள்கையளவில் சம்மதம் தெரிவிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.


யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

மகாபொலக் கொடுப்பனவு

6ஆம் தவணைப்பணம்

பல்கலைக்கழக மாணவர்களுக்கான 6ஆம் தவணை மகாபொலக் கொடுப்பனவுகளை 14-07-93 முதல் வழங்க பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் ஒழுங்குகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக்கொடுப்பனவுகள் பற்றிய முழு விபரங்களும், அறிவுறுத்தல்களும் பல்கலைக்கழக விளம்பரப்பலகைகளில் இடப்பட்டுள்ளன. இதற்கமைவாக கொடுப்பனவை உருத்துடைய மாணவர்கள் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

— பதிவாளர்

(சி/7005)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 13-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10372

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-7081, 24-5734, 22-3611, 24-3897, 26-4874
42-1547, 26-1583, 26-5517, 42-3514, 41-5583.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

28-3289, 26-5157, 41-9579, 24-6161, 41-8031
27-2056, 26-3473, 24-0917, 27-5186, 41-5979
24-8391, 24-5418, 27-9492, 26-3412, 42-4927
28-7662, 28-1636, 41-2659, 28-0732, 26-2366
26-3183, 41-9791, 41-5015, 26-5760, 28-6853
28-8367, 27-9033, 26-7353, 42-7033.


சோழன் நெல் அரிசி வாணிபம்

15-07-1993 (நாளை) வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு

பலாலி வீதி, திருநெல்வேலியில் புதிதாகத் திறக்கப்படவிருக்கும்

சோழன் நெல் அரிசி வாணிப நிலையத்தில்

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட தரமான

நாட்டரிசி, தவிடு, நெல் மற்றும் உள்ளூர் விளைபொருள்களை

நியாய விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை

சகல வியாபாரிகளுக்கும், பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

நிர்வாகி,

சோழன் நெல் அரிசி வாணிபம்

(சி/7007)



தேவை

அச்சுக்கோர்ப்பாளர்

(தமிழ், ஆங்கிலம்)

இயந்திர இயக்குநர்

(தன்னியக்க மற்றது)

மேற்படி பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.
தகுதியானோர் சான்றிதழ்களுடன்
நேரில் வரவும்.

ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம். (இ)